24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 20
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 166 சித்திரை 30ஆம் நாள் திங்கட்கிழமை 13 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# வலிசுமந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பம்

கிளிநொச்சி, மே 13
தமிழர்கள் வாழ்வில் மறக்கமுடியாத வடுவை ஏற்படுத்திய, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்று ஆரம்பமாகியது. பத்தாவது ஆண்டு நினைவேந்தல் வாரத்தின் முதலாவது சுடர் நேற்று ஏற்றப்பட்டது.
2009ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது வன்னிப் 06





## அதிநவீன நீர்மூழ்கி உபகரணங்கள் அம்பாறையில் நேற்று மீட்கப்பட்டன

கொழும்பு, மே 13
கடலுக்கடியில் சென்று தாக்குதல் நடத்தக்கூடிய அதிநவீன நீர்மூழ்கி இயந்திரங்கள் அம்பாறையில் பாதுகாப்புப் படைகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
அதிநவீன இயந்திரங்கள் எப்படி இலங்கைக்குக் 17

## ஸஹ்ரானுடன் உறுதிமொழியெடுத்த காணொலியை அனுப்பியவர் கைது

கொழும்பு, மே 13
இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரியாகக் கூறப்படும் ஸஹ்ரானுடன் உறுதிமொழி எடுத்த காணொலியை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு அனுப்பிய 07

## மார்தட்டுகிறார் கோத்தபாய

# களமிறங்கினால் நிச்சயம் வெல்வேன்

## *வென்றதும் முஸ்லிம் தீவிரவாதத்தை ஒழிப்பதே முதல்பணி*



கொழும்பு, மே 13
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் நான் வேட்பாளராகக் களமிறங்குவது உறுதி. அதேவேளை, அந்தத் தேர்தலில் நான் வெற்றியடைவதும் உறுதி. இவ்வாறு தெரிவித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச. 06

## வலி. வடக்கில் சிறுமிமீது துர்நடத்தை

யாழ்ப்பாணம், மே 13
வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 17 வயதுச் சிறுமி துர் நடத்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகப் 06

## தற்கொலைதாரிகள் மரபணு ஊடாக உறுதிசெய்யப்பட்டனர்

கொழும்பு, மே 13
கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் மற்றும் நீர்கொழும்பு கட்டுவபிட்டி தேவால 17

## சமூக ஊடக தகவல்களை நம்பாதீர்கள்

*இராணுவத் தளபதி கோரிக்கை*

கொழும்பு, மே 13
சமூக ஊடகங்களில் வெளியா 06

## வெடிகுண்டு மிரட்டலையடுத்து வவுனியாவில் ராணுவம் குவிப்பு

வவுனியா, மே 13
வவுனியா மாவட்ட பொது மருத்துவமனை மற்றும் மதீனாநகர் பகுதியிலுள்ள பாடசாலை ஆகியவற்றுக்கு அநாமதேயக் கடிதம் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, வவுனியா நகரப் பகுதிகள் எங்கும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். சோதனைநடவடிக்கைகளும்தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.
வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு முன்பாகவுள்ள வீதி போக்கு 05

## குண்டுத்தாக்குதல் எச்சரிக்கை கொழும்பில் பேரச்சம்

கொழும்பு, மே 13
தலைநகர் கொழும்பில் இன்று நான்கு இடங்களில் குண்டுத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற எச்சரிக்கை காரணமாக மக்கள் அச்சமடைந்துள்ளனர். நேற்றைய தினமே மக்கள் வீடுகளுக்கு முடங்கியுள்ளதுடன், கொழும்பு நகரில் தங்கியிருந்து வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோர் தமது சொந்த இடங்களுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர். தாக்குதல் தொடர்பில் பொதுமக்கள் 07

## நாட்டில் எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தலும் இன்று இல்லை

*பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு*

கொழும்பு, மே 13
நாட்டின் பாதுகாப்புக்கு இன்று எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், மூத்த பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர நேற்றுத் தெரிவித்தார்.
பயங்கரவாதத் தாக்குதல்கள் இன்று நடத்தப்படவுள்ளன என்று வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற் 06

*இஸ்லாமிய தீவிரவாதிகளுக்குத் தீனிபோட்ட*

## கோத்தா களமிறங்கினால் மீண்டும் குருதி ஆறு ஓடும்

*எச்சரிக்கின்றது ஜே.வி.பி.*

கொழும்பு, மே 13
இலங்கையில் உயிர்த்த ஞாயிறன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்திய இஸ்லாமியத் தீவிரவாத இயக்கமான தேசிய தௌஹீத் ஜமாத் 17

## ரிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

கொழும்பு, மே 13
கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சமர்ப்பிக்கவுள்ளதாக இலங்கை தேசிய மகா சபையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பின 06

## முகநூல் கருத்தால் சிலாபத்தில் ஊரடங்கு

*ராணுவம் துப்பாக்கிச்சூடு*

கொழும்பு, மே 13
சிலாபத்தில் நேற்றுக் காலை ஏற்பட்ட பதற்ற நிலைமைக்கு முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் முகநூல் கருத்தே காரணம் எனத் தெரிவித்துப் பொலிஸார் அவரைக் 05




## வடகிழக்குக்கு ராணுவப் பாதுகாப்பு கோருவதென்றால் போர்க் குற்றச்சாட்டு பொய்யென்பது உறுதியாகின்றது

*இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்கா தெரிவிக்கின்றார்*

கொழும்பு, மே 13
வடக்கு - கிழக்கில் மீண்டும் இராணுவப் பாதுகாப்பு வேண்டும் என்று அரசியல்வாதிகள் கோருகின்றனர் என்றால் இராணுவம் மீதான போர்க்குற்றச்சாட்டு பொய் என்பது உறுதியாகின்றது. இவ்வாறு இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்கா தெரிவித்தார். 07

வற்றாப்பளை பொங்கலை முன்னிட்டு

## உப்பு நீரில் விளக்கெரிக்க தீர்த்தம் இன்று எடுக்கப்படுகிறது

*காட்டுவிநாயகர் கோவிலில் நிகழ்வு ஆரம்பம்*

முல்லைத்தீவு, மே 13
வரலாற்று தொன்மை மிக்க முல்லைத்தீவு வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவில் பொங் 07

# செவ்வாய் பெயர்ச்சி பலன்கள் 2019

ஒரு மனிதனின் தைரிய உணர்வுக்கும், பூமி, வீடு, சகோதரன் ஆகியவற்றிற்கும் காரகனாக நவகிரகங்களில் செவ்வாய் பகவான் இருக்கிறார். அந்த செவ்வாய் பகவான் பெப்ரவரி 6 ஆம் திகதி இரவு 12.10 மணியளவில் மீனம் ராசியிலிருந்து மேஷம் ராசிக்கு பெயர்ச்சியடைந்தார். அந்த செவ்வாய் பகவானின் பெயர்ச்சியால் 12 ராசியினருக்குமான பலன்கள் என்ன என்பதை இங்கு தெரிந்து கொள்ளலாம்.



### மேஷம்

மேஷ ராசிக்கு பெயர்ச்சியாகியிருக்கும் செவ்வாய் கிரகத்தால் சகோதர, சகோதரி வழியில் சுபிட்சமான உறவு ஏற்படும். அவர்களால் தன லாபம் உண்டாவதற்கான வாய்ப்பும் உண்டு. உடல் நிலை நன்றாக இருக்கும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு மக்கள் செல்வாக்கும், அரசாங்கத்தில் உயர் பதவிகள் பெறக்கூடிய யோகம் உண்டாகும். குடும்ப பெண்களுக்கு பொன் ஆபரண சேர்க்கை ஏற்படும். புதிய வீடு, வாகனம் , அசையா சொத்துகள் வாங்கி குவிப்பீர்கள்.

### ரிஷபம்

ரிஷபத்திற்கு 12 ஆம் வீடான மேஷம் ராசிக்கு செவ்வாய் பெயர்ச்சியாகியிருப்பதால் இந்த மாதம் உங்களுக்கு சராசரியான தனவரவுகளே இருக்கும். வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் வாங்குவது சற்று காலதாமதமாகலாம். வயதில் மூத்தவர்களிடம் எதிலும் அனுசரித்து செல்வதே நல்லது. குடும்பத்தில் உள்ள பெண்களுக்கு சற்று உடல் நிலை பாதிக்கக்கூடும். கணவன் மனைவிக்கிடையே இருந்த பிரச்சனைகள் நீங்கும். புதிய தொழில், வியாபார முயற்சிகளில் கடின உழைப்பின் மூலமே ஓரளவு லாபம் ஈட்ட முடியும்.

### மிதுனம்

மிதுன ராசியினருக்கு பதினொன்றாமிடமாகிய மேஷம் ராசிக்கு செவ்வாய் பெயர்ச்சியடைந்திருப்பதால் தாய் வழியில் உடல் நலக் குறைவு ஏற்பட்டு மருத்துவ செலவு ஏற்படும். கொடுக்கல், வாங்கல் சுமூகமாக இருக்கும். மாணவர்கள் கடினமாக முயற்சித்தால் மட்டுமே கல்வியில் சிறக்க முடியம். வெளிநபர்களிடம் பணம் சம்பந்தமான விஷயங்களில் சிறிது எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். கலைஞர்கள் வெளிநாடுகளுக்கு சென்று பொருளும் புகழும் ஈட்டக்கூடிய சூழல் ஏற்படும்.

(தொடரும்)






## 12 ராசியினருக்குமான சனி வக்கிர சஞ்சார பலன்கள்

ஆயுள் காரகனாகிய சனி பகவான் மே 10 திகதி முதல் ஓகஸ்ட் 11 ஆம் திகதி வரை வக்ரகதியில் சஞ்சாரம் செய்யவுள்ளார். சனி பகவான் வக்கிர கதியில் சஞ்சரிக்கும் காலத்தில் 12 ராசியினருக்கும் ஏற்பட உள்ள பலன்கள் என்ன என்பதை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

**மேஷம்:** வீண் விரையங்கள் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். திருமணமான தம்பதிகளுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். பிறரின் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதால் வீண் பிரச்சினைகளை தவிர்க்கலாம். தொழில், வியாபாரங்களில் சுமாரான இலாபங்கள் ஏற்படும். அலுவலகங்களில் உங்கள் வேலையில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது.

**ரிஷபம்:** சனி பகவான் வக்கிர கதியில் வரும் இக்கால கட்டங்களில் உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுடன் கருத்து வேறுபாடுகள், வாக்குவாதங்கள் ஏற்படலாம். சிறிது உடல் நல குறைபாடுகள் ஏற்பட்டு நீங்கும். பணிகளில் எதிர்பார்த்த பணி இடமாற்றம், பதவி உயர்வு போன்றவற்றில் தாமதங்கள் உண்டாகும்.

**மிதுனம்:** மீன ராசிக்கு சனி பகவான் ஏழாம் வீட்டில் நின்றாலும் பூராடம் நட்சத்திரத்தில் வக்கிரம் அடைந்து இருப்பதால் உடல் ஆரோக்கிய நிலை மேம்படும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சிகரமான செய்திகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் நல்ல லாபங்கள் உண்டாகும். பணியிடங்களில் மேல் அதிகாரிகள் மற்றும் சக ஊழியர்களின் முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கடகம்:** சனி பகவான் வக்கிரம் அடைந்திருக்கும் இக்காலகட்டத்தில் கடக ராசியினர் வாகனம் ஓட்டும்போதும் இன்ன பிற விடயங்களிலும் மிகக் கவனமாக இருக்க வேண்டும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதை சற்று ஒத்தி வைப்பது நல்லது. சிலர் அலுவலகத்தில் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** சிம்ம ராசியினருக்கு வீண் அலைச்சல்கள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகளில் பல வித தடை தாமதங்கள் ஏற்படும். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கும். வியாபாரத்தில் சுமாரான இலாபம் இருக்கும். அலுவலகங்களில் சக ஊழியர்களுடன் பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கன்னி:** குடும்பத்தில் அவ்வப்போது பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். எந்த ஒரு விடயத்திலும் வயதில் பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடப்பது நல்லது. தொழில்,வியாபாரங்களில் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதை சமாளித்து வெற்றி பெற முடியும். பிறரின் விடயங்களில் தலையிடாமல் இருப்பதால் வீண்வம்பு வழக்குகளைத் தவிர்க்கலாம்.

**துலாம்:** பிறரை பற்றி வீண் பேச்சுக்களை பேசுவதை தவிர்க்க வேண்டும். செய்யும் காரியங்கள் எதிலும் பொறுமையாக செயல்பட்டால் வெற்றி பெற முடியும். குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களிடையே சுமூகமாக செல்வது நல்லது. வியாபாரத்தில் விற்பனை அதிகரித்து இலாபம் ஏற்படும்.

**விருச்சிகம்:** உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஒரு சிலருக்கு தெய்வ பக்தி அதிகரித்து கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டு புண்ணியம் பெறுவார்கள். பணியிடத்தில் உயர் அதிகாரிகள் மற்றும் சக ஊழியர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும். தொழில், வியாபாரங்களில் இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கி விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**தனுசு:** குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். உறவினர்களிடையே நீடித்து வந்த மனக்கசப்புகள் தீரும். வெளிநாடு செல்வதற்கான முயற்சிகள் வெற்றி பெறும். உங்களுக்கு கீழே இருக்கும் பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைத்து உங்களுக்கு பாராட்டுக்கள், லாபங்கள் கிடைக்கும்.

**மகரம்:** உங்கள் பூர்வீக சொத்து சம்பந்தமான வழக்குகளில் இழுபறி நிலை நீடிக்கும். எந்த ஒரு விடயத்திலும் அவசரப் படாமல் பொறுமையாக செயல்படுவது நல்லது. உறவினர்கள் மற்றும் நண்பர்களால் சிறு பிரச்சினைகள் ஏற்படலாம். பணிகளில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த இடங்களுக்கு இடமாற்றம் கிடைக்கும்.

**கும்பம்:** நீங்கள் நீண்ட நாள் மனதில் நினைத்திருந்த காரியங்கள் அனைத்தும் ஒவ்வொன்றாக நிறைவேறும். சிலருக்கு புதிய வீடு, நிலம் போன்ற சொத்துக்கள் சேர்க்கை உண்டாகும். வேலை தேடி அடைந்தவர்களுக்கு விரும்பியபடி வேலை அமையும்.

**மீனம்:** எந்த ஒரு விடயத்திலும் உங்கள் பலம் அறிந்து செயல்படுவது நல்லது. பிறரை நம்பி எந்த ஒரு காரியத்தையும் ஒப்படைக்க வேண்டாம். உறவினர்கள், நண்பர்களிடம் வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. ம். வருமானத்திற்கு குறைவு ஏற்படாது ஒரு சிலருக்கு பணியிடங்களில் சக ஊழியர்களால் பிரச்சனைகள் ஏற்படும்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 12 . 1945

மறைவு 08 . 05 . 2019

### திருமதி குண்டுமணிதேவி இராசதுரை

யாழ். மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கு, இராசவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குண்டுமணிதேவி இராசதுரை 08.05.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசையா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் இராசதுரை (செல்வராசா - ஓய்வு பெற்ற காசாளர், வலி கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கம்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திவாகரமூர்த்தி, ஸ்ரீகரன், மற்றும் கலைச்செல்வி (செல்வி-சுவிஸ்),கருணாகரன்(செல்வா-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசரஞ்சனி, அகிலானந்தன்(அகி - கனடா), மகேந்திரன், ஜனார்த்தன் (ஜனா- சுவிஸ்) ஆகியோரின் வளர்ப்புத் தாயாரும் கருணைவேல், பத்மாவதி, வேதேஸ்வரன், அனுஜா, சஞ்ஜீவனி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், நவரத்தினம், ஞானலிங்கம், இரத்தின சிங்கம், தவமணிதேவி மற்றும் நீலமணிதேவி (உரும்பிராய்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சொர்ணமலர், அன்னலட்சுமி, மகேஸ்வரி, கமலாதேவி, இந்திராதேவி, தர்மராசா, கலாநிதி, பத்மநாதன், அற்புதநிதி, லிங்கேஸ்வரன், காலஞ்சென்றவர்களான இராசமணி, தியாகராசா, இரங்கநாதன், செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சஹானா, சஹீரன், திவானா, திவியன், கவிரா, கிருஷ்ணவி, ஐந்துயா, தயன், குணாளன், அஜந்தன், அவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராச வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

(CS 25250)(14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

செல்வராசா (கணவர்) - Phone : +94212058410
செல்வி (மகள்) - Mobile : +41315583625
செல்வா (மகன்) - Mobile : +33143053034/ அகி - Mobile : +16136974389
ஜனா - Mobile : +41791387178/076 144 5055

## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 03 . 1954

இறப்பு 11 . 05 . 2019

### திருமதி விசாலாட்சி குகானந்தன் (பாக்கியம்)

சரவணை கிழக்கு 9 ஆம் வட்டாரம், வேலணையைப் பிறப்பிடமாகவும், 64/3 கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி குகானந்தன் 11.05.2019 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரர் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகரெட்ணம் மற்றும் சவுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகளும், குகனாந்தனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, மனோன்மணி, அருமைநாயகம், லெட்சுமி, தியாகராசா மற்றும் நாகநாதபிள்ளை, காலஞ்சென்ற தாட்சாயணி மற்றும் அம்பிகாவதி காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தவமணி, பசுபதிப்பிள்ளை மற்றும் தவமணிதேவி காலஞ்சென்றவர்களான் தாமோதரம்பிள்ளை, ஞானாம்பிகை மற்றும் மனோரஞ்சிதம் காலஞ்சென்றவர்களான பரமசுந்தரம், மீரா மற்றும் இராஜேஸ்வரி, ஞானேஸ்வரி, மஞ்சுளா, குகபாலன், நிர்மலாதேவி, ஜெயராஸ் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சுந்தரமூர்த்தி, தமிழ்ச்செல்வி, இராஜேந்திரம், விஜி ஆகியோரின் சகலியும், ஜெகந்தனின் (கேசன்) பாசமிகு தாயாரும், பிரியதர்சினியின் (துர்கா) அன்பு மாமியாரும், ஷியாம், ஆதீஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பால்ராஜ் மற்றும் வசந்தி தம்பதிகளின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2019) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64/3, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(CS/25327)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

077 676 2065

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி மாணிக்கவாசகர் (கிளிஅக்கா)

**(S.M.K ரேடேர்ஸ் - உரிமையாளரின் மனைவி)**



பிறப்பு 25.12.1945

இறப்பு 11.05.2019

கொக்குவில் கிழக்கு, பிரம்படியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி மாணிக்கவாசகர் நேற்று முன்தினம் (11.05.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், மாணிக்கவாசகர் அவர்களின் அன்பு மனைவியும், மகேந்திரன் (சுவிஸ்), ரவீந்திரன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சிறிதரன், ராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகசபாபதி, மகேஸ்வரி, பரமேஸ்வரி, மகாலக்சுமி, இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, நல்லநாதன் ஆகியோரின் அன்புமைத்துனியும், கவிதாஸ், தயாபரன் (சுவிஸ்), லிங்கரூபன் (சுவிஸ்), குகப்பிரியன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத்தாயும், தர்மிகா, சுவர்ணா, சிந்து ஆகியோரின் அன்பு மாமியும், ஆர்ஜன், அஸ்மிதா, கவிஷா, சர்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.40, பிரம்படி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்
குடும்பத்தினர்.

021 205 2327, 077 718 1970 (cs 22251)(13,17)

## கேள்வி அறிவித்தல்

**வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா**
**சபைநிதி வேலைத்திட்டம் -2019**

01. தலைவர், பெறுகைக்குழு, வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருட்களுக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா (தொலைபேசி: 024-22225737/024-3248937, மின்னஞ்சல் - npvstps@yahoo.com) ஊடாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 13.05.2019 ஆம் திகதியிலிருந்து மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணமொன்றை எழுத்து மூலமான கோரிக்கையினை சமர்ப்பித்து தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா எனும் அலுவலகத்திலிருந்து 13.05.2019 ஆம் திகதியிலிருந்து 27.05.2019 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/ (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
6. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா எனும் முகவரிக்கு 27.05.2019 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்களின் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்யவோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 49 நாள்கள் (நாற்பத்தி ஒன்பது நாள்கள்) 15.07.2019 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/43/5/5.5/ 1-3/19 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் | 0.794 | 1 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 8000.00 | 15.07.2019 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 23.05.2019 ஆம் திகதி 14.30 மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நெளுக்குளம்.**
**13.05.2019**

(14.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 23.04.2018 திங்கட்கிழமை இறைபதமடைந்த
எமது அன்புச்செல்வம்

### அமரர் பிரபாகரன் துவாரகன்

தோற்றம் 05.11.2002 — மறைவு 23.04.2018

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையிலே
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
செல்லப்பிள்ளையாக வாழ்ந்தவேளை
இளமையிலே முடிவெழுதி கவர்ந்ததேனோ?
மாறாத சோகமுடன் மனமுருகிப் புலம்புகின்றோம்
கனத்த இதயமுடன் கண்ணீரால் ஓராண்டு அஞ்சலிக்கின்றோம்

அன்னாரின் ஓராண்டு நினைவு தின நிகழ்வுகள் 13.05.2019 திங்கட் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற வுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.
077 965 2001

E.S Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

**P.P.T EXPRESS**

# இரவு பகல் சேவை




பருத்தித்துறை - 7:00 A.M
யாழ்ப்பாணம் - 8:00 A.M
வெள்ளவத்தை - 7:00 A.M
கொட்டாஞ்சேனை - 8:00 A.M

**Colombo - Jaffna Buss Services**
**International Parcel Service**

HOTLINE Colombo - 077 575 5175, 076 440 8951 Jaffna - 077 573 1318, 076 440 8947

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலக திட்டமிடல் அலகில்
அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
**ந.சாரங்கனின்** பாசமிகு தந்தையார்

# சின்னையா நவரத்தினம்

கடந்த 10.05.2019 இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் - தென்மராட்சி**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் போதனாசிரியர்
**திரு. மா. இளம்பிறையன்** அவர்களின் அன்புத்தந்தையாரான ஓய்வுபெற்ற உப அதிபர்

### சதாசிவம் மாணிக்கவாசகர்

அவர்கள் கடந்த 10.05.2019 அன்று இறைபதம் எய்தினார். அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதிபெறப் பிராா்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

## மரண அறிவித்தல்

### திருமதி டெனிஸ் எமிலியானுஸ் தேவமலர்



கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், இல.58, றக்கா வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவமலர் (மலர்) 11.05.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டெனிஸ் எமிலியானுஸின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - பிரகாசியம்மா (பொன்னாச்சி) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான குருசுமுத்து - லூர்த்து தம்பதிகளின் மருமகளும், அன்ரனெற் ஜெனிற்ரா (ஆசிரியர் - யா/ புங்குடுதீவு மகா வித்தியாலயம்), அன்ரனி ஜெயக்குமார், டொனால்ட் றொபின்சன் (Halo Trust), யுலிற்ரன் றஜீவ் (Berlux Paints pvt Ltd) ஆகியோரின் தாயாரும், அரஸ்டானியல், நிசாந்தினி, சாந்தி ஆகியோரின் மாமியாரும், ராணி, காலஞ்சென்ற அன்ரன், வின்சன், பயஸ் மற்றும் விஜயன், குணம் ஆகியோரின் சகோதரியும், பயஸ் - இந்திரா, அன்ரன் இளங்கோ, ஈஸ்வரி, சுபோ, இரட்ணசிங்கம் ஆகியோரின் மைத்துனியும், டொறினாவின் பெரிய தாயாரும், அஷ்மிதன், லக்ஷன், வக்ஷன், ஜெருஷிக்கா, அக்ஷயா, பிரீத்திக்கா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (13.05.2019) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதன் பின்னர் பூதவுடல் கரம்பொன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.58, றக்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/25305 (11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வெடிகுண்டு...

வரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளன. மருத்துவமனையைச் சுற்றியுள்ள அநேகமாக வீதிகளில் வாகனங்கள், மக்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் பயணம் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.
வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இராணுவத்தால் புதிதாகச் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது. வவுனியா நகரினுள் உள்செல்லும் வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. பேருந்து நிலையத்தினுள் செல்லும் அனைத்துப் பயணிகளினதும் பொதிகளை பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர் சோதனைக்கு உட்படுத்துகின்றனர்.
வவுனியா மன்னார் வீதி, காமினி மாக வித்தியாலத்துக்கு முன்பாக பாதையின் இரு பகுதியிலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வவுனியா நகரினுள் உள்செல்லும் மற்றும் வெளிச்செல்லும் வாகனங்கள் கடுமையான சோதனைக்குள்ளாக்கபட்டு வருகின்றன.
மதீனாநகரை அண்டிய பகுதிகளிலும் மதீனாநகர் பாடசாலையைச் சூழவுள்ள பகுதிகளிலும் இராணுவத்தினர் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளனர். (ஒ.5,110)

## குற்றங்களைத் தடுப்போம்

### பாதுகாப்பாக வாழ்வோம்

நவீன தொழில் நுட்பமும் உத்தரவாதத்துடன் கூடிய கண்காணிப்புக் கரமராக்கள்



கையடக்கத் தொலைபேசிகளிலிருந்து அவதானிக்கும் வசதி

Special Offer!

**Home CCTV Systems**
**AHD 4CH 1.3MP Outdoor CCTV**
Package Includes
1x DVR 4 Channel KKBRO
1x 1TB Hard Drive
4 x KKBRO 1.3MP Cameras
1x 100m BNC + Power cable
1x Power supply
Rs 29,900/-

**Home CCTV Systems**
**AHD 8CH 1.3MP Outdoor CCTV**
Package Includes
1x DVR 8 Channel KKBRO
1x 1TB Hard Drive
8 x KKBRO 1.3MP Cameras
1x 200m BNC + Power cable
1x Power supply
Rs 44,900/-

MICRO PC SYSTEMS
Micro Power Co Systems

021 222 5893 / 077 742 5973
077 396 3280 / 071 328 5260
218, Hospital Road, Jaffna.
email: jaffna@micropcsystems.com

## துயர் பகிர்கின்றோம்



வேலணை கிழக்கு, பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருப்பணிச் சபை பரிபாலன சபை ஆகியவற்றின் முன்னை நாள் கௌரவ செயலாளராக தீர்க்கமுடன் செயலாற்றியதுடன் ஆலய நலன்களில் எப்பொழுதும் அக்கறையுடன் இருந்தவருமாகிய

### சதாசிவம் மாணிக்கவாசகர்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பெருங்குளம் முத்துமாரி அம்மனின் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.


**பரிபாலன சபையினர்**
**வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம்**

## முகநூல்...

கைது செய்துள்ளனர். அவர் இட்ட பதிவொன்றைத் தவறாக விளங்கிக்கொண்ட சிங்கள இளைஞர்குழுவேகுழப்பத்தைவிளைவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இளைஞர் குழுவைக் கலைப்பதற்கு ராணுவத்தினர் வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தினர். நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக இன்று அதிகாலை 4 மணி வரையில் அந்தப் பகுதியில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிங்கள இளைஞர் ஒருவர் முகநூலில், இது என்ன பாவம் என்று சிங்களத்தில் பதிவிட்டுள்ளார். அதில் முஸ்லிம் வர்த்தகரின் பெயரையும் இணைத்துள்ளார். அந்தப் பதிவுக்கு பின்னூட்டத்தை முஸ்லிம் வர்த்தகர் பதிவு செய்துள்ளார். அந்தப் பதிவை அவர் ஆங்கிலத்தில் பதிந்துள்ளார்.
'Dont laguh more 1 day u wil cry' என்று குறிப்பிட்டுள்ளார். அளவுக்கதிகமாகச் சிரித்தால் ஒரு நாள் அழவேண்டி வரும் என்பதை பதிவிட்டிருந்தார்.
சிங்கள இளைஞர்கள் இந்தப் பதிவை தவறாக அர்த்தப்படுத்தியதாலேயே குழப்பம் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சிங்கள இளைஞர்கள், 'இன்று மட்டும்தான் நீங்கள் சிரிப்பீர்கள்; நீங்கள் அழ இன்னும் ஒரு நாள் இருக்கின்றது' என்று அதனை அர்த்தப்படுத்தி முஸ்லிம் வர்த்தகருடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸ் நிலையத்துக்கும் சென்று தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதன்போது பிரச்சினை பூதாகரமானது. அங்கு ஏற்பட்ட பதற்ற நிலைமையையடுத்து கடைகள் அனைத்தும் நகரத்தில் மூடப்பட்டன. தர்க்கத்தில் ஈடுபட்ட சிங்கள இளைஞர்களை வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டுக் கலைத்த இராணுவம் அங்கு நிலமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தது. இதனையடுத்து சிலாபம் பொலிஸ் பிரிவில் ஊரடங்குச் சட்டம் உடன் நடைமுறைக்கு வந்தது.
இன்று காலை 6 மணி வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர முன்னர் அறிவித்திருந்தார். நிலமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதையடுத்து காலை 4 மணி வரையாக குறைக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே இன்று திங்கட்கிழமை ஏதும் அசம்பாவிதங்கள் நடக்கலாம் எனச் செய்திகள் பரவியிருந்த நிலையில், குறித்த முஸ்லிம் வர்த்தகரின் பதிவை அதனுடன் ஒப்பிட்டு சிங்கள இளைஞர்கள் பார்த்ததால் இந்தக் களேபரம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர். எப்படியாயினும் தற்போது வர்த்தகரைக் கைதுசெய்துள்ள பொலிஸார், இந்தப் பதிவு தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.
(ஒ.5,22)

## நீங்காத நினைவலைகள்

**25ஆம் ஆண்டு** | **முதலாம் ஆண்டு** | **2ஆம் ஆண்டு**



**அமரர் செல்லையா நடராசா**
தோற்றம் 12.06.1919 மறைவு 29.07.1994



**அமரர் நடராசா பூபதி**
தோற்றம் 20.07.1929 மறைவு 25.04.2018



**அமரர் நடராசா பாஸ்கரன்**
தோற்றம் 08.03.1962 மறைவு 17.05.2017

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் இருப்பிடமாய் அன்பின் ஊற்றாய் அனைவருக்கும் உதவும்
நல் எண்ணம் கொண்டவர்களாக வாழ்ந்தீர்கள் எம்மை விட்டு நீங்கள் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்மனதில் வாழும்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

**"முருகபவனம்"**
**தாவடி தெற்கு, கொக்குவில்.**

(CS/25281)(11,17)

**குடும்பத்தினர்.**

## நாஹா மருத்துவ நிலையம்

- கை, கால்களில் எரிவுடன் கூடிய அதிக விறைப்பு, கால்பாதம் - அதிகவீக்கம், சிறுநீரகப்பாதிப்பு, முழங்கால் வாதம், பாரிசவாதம், சிறுநீரகம் தடைப்படல் - குணப்படல்
- குழந்தையின்மை IUI தோல்வி பெற்றவர் வெற்றி பெறல்.

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி(கைபதி வீடு),
மானிப்பாய்.

(CS 25265 (11,17)

**077 321 2740**

## வீடு காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு பிரம்படி லேன் கொக்குவிலில் 2பரப்பு காணியில் அமைந்த புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

**076 702 3565**

## கார் விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையிலுள்ள
19 - XXXX Nissan sunny கார்
விற்பனைக்கு உண்டு
தரகர்கள் இன்றி நேரடியாக
தொடர்பு கொள்ளவும்.
**தொடர்பு-0712717393**

## களமிறங்கினால்...

அரச தலைவராகப் பதவியேற்றதும் இலங்கையில் வேரூன்றி இருக்கும் இஸ்லாமிய தீவிரவாதத்தைக் கூண்டோடு அழிப்பதே எனது முதல் இலக்கு' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் பன்னாட்டு ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தாக்குதலுடன் என்னையும் தொடர்புபடுத்தி ஐக்கிய தேசியக் கட்சியினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் விசமத்தனமான பரப்புரைகளை மேற்கொள்கின்றனர். தங்கள் வாக்கு வங்கிக்காக அவர்கள் இந்தப் போலிப் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். உண்மையில் எனக்கும் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

இஸ்லாமியத் தீவிரவாதிகள் பலர் இலங்கையில் இன்னமும் மறைந்திருக்கின்றார்கள். பெரும் தாக்குதல்களுக்கு அவர்கள் திட்டம் தீட்டுகின்றார்கள் எனப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த அரசால் இஸ்லாமியத் தீவிரவாதிகளை இல்லாதொழிக்க முடியாது. ஏனெனில், அரசில் உள்ள முஸ்லிம் அமைச்சர்களும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு மறைமுகமாக உதவுகின்றார்கள். ஆனால், குறித்த அரசியல்வாதிகளுக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தநிலையில், இஸ்லாமியத் தீவிரவாதிகளை இந்த அரசு எப்படி இல்லாதொழிக்கும்?

அரச தலைவர் தேர்தலில் நான் வென்றதும் இஸ்லாமியத் தீவிரவாதிகளைக் கூண்டோடு அழிப்பதே எனது முதல் இலக்காக இருக்கின்றது - என்றார். (ஒ.5.22)

## வலி. வடக்கு...

பொலிஸார் தெரிவிக்கின்றனர். பாதிக்கப்பட்ட சிறுமி தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வலி.கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுச் சிறுமி, வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிக்கு நேற்று மாலை சென்றுள்ளார். அவர் திரும்பி வரும்போது இருவர் அவரை மறித்து கடத்திச் சென்று துர்நடத்தைக்கு உட்படுத்தியதாக கூறப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சிறுமி அபாயக் குரல் எழுப்பியதைத் தொடர்ந்து அவரை மீட்டு தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்த்தாகவும் பொலிஸார் கூறுகின்றனர். சந்தேகத்தில் இரண்டு இளைஞர்களை அச்சுவேலிப் பொலிஸார் நேற்று இரவு கைது செய்துள்ளனர். (ஒ.5.105)

## சமூக ஊடக ...

கின்ற தகவல்களை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க கேட்டுக் கொண்டுள்ளார். தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினியில் உரையாற்றிய இராணுவத் தளபதி, சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் பல்வேறு தகவல்களில் உண்மையில்லை என்றும், கூறினார். இஸ்லாமிய அடிப்படைவாத வலையமைப்பின் உயர்மட்டத்தினர் குண்டுத் தாக்குதல்களில் இறந்து விட்டனர். இரண்டாம் மட்டத்தில் உள்ள தலைவர்களில் பெரும்பாலானோரும், 75 வீதமான சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புடைய புற சக்திகளைக் கண்டறிந்து அடையாளம் காணும் முயற்சிகள் நடந்து வருகின்றன. இது சித்தாந்தத்துடன் தொடர்புடைய விடயம். நிலத்தைக் கேட்கின்ற தீவிரவாதம் அல்ல. அவர்கள் எதையும் கேட்கவில்லை. எனவே இலங்கையிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ ஒரு சமூகத்தில் இதனை கையாளுவது சுலபம் அல்ல, என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

## ரிசாத் ...

ருமான அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து அமைச்சர் ரிசாத் பதியுதீனை அதனுடன் தொடர்புபடுத்தி சிங்கள அரசியல்வாதிகள் குற்றம் சுமத்தி வருகின்றனர். இவ்வாறானதொரு நிலையிலேயே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்வைக்கப்படவுள்ள தாக அத்துரலிய ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளிப்படுத்தினார். மேல் மாகாண ஆளுனர் அசாத் சாலி, கிழக்கு மாகாண ஆளுனர் ஏ.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோரை ஆளுனர் பதவியிருந்து நீக்குவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இவர்களை பதவியிலிருந்து நீக்குவதற்கான யோசனையை புதன்கிழமை அரச தலைவர் மைத்திரியிடம் கையளிக்கவுள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ஒ.5)

## நாட்டில்...

கண்டவாறு கூறினார். 'எந்தவொரு தகவலாக இருந்தாலும் அது தொடர்பில் அறிவிக்கப்பட்டதுமே பாதுகாப்பு தரப்பினர் விசாரணைகளை நடத்துவார்கள். எந்தவொரு தகவலையும் நாம் சாதாரணமாக எடுத்துகொள்ளமாட்டோம். இன்று நாட்டின் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. புலனாய்வு பிரிவுகளுக்கும் இது குறித்த தகவல்கள் கிடைக்கவில்லை' என்றும் குறிப்பிட்டார். (ஒ.5)

## வலிசுமந்த...

பெருநிலப் பரப்பில் வாழ்ந்த லட்சோப மக்கள் குறுகிய வெளிக்குள், வெளித்தொடர்புகள் எதுவும் அற்ற நிலையில் முடக்கப்பட்டனர். இராணுவத்தினரின் குண்டுவீச்சுத் தாக்குதல்களால் மருத்துவமனைகள், பாடசாலைகளில் தங்கியிருந்த மக்கள் உயிரிழந்தனர். பல ஆயிரக்கணக்கான மக்கள் குறுகிய நாள்களில், கொன்று குவிக்கப்பட்டனர். குருதியால் முள்ளிவாய்க்கால் மண் குளித்தது. இந்தக் கொடூரத்தின் நினைவு நாள்களை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரமாக தமிழ் மக்கள் நினைவுகூர்ந்து வருகின்றனர்.

பத்தாவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதல் நாளான நேற்று, கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஈகச் சுடர் ஏற்றப்பட்டு நினைவுகூரப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ஆ.புவனேஸ்வரன், சபா.குகதாஸ் ஆகியோர் பங்கேற்றனர். (ஒ.5.35)

---

## சேவைநலன் பாராட்டு



எமது வித்தியாலயத்திலிருந்து இன்று
ஓய்வுபெறும் ஆசிரியை

**திருமதி ஞானரஞ்சிதம் கலாநிதி (SLTS 1)**

யார் தந்த வரமோ - நீரெம் ஆரம்பப் பிரிவு வந்தமை
நின் அகவை அறுபது எம் உறவைப் பிரித்தது
பிரிவு ஒன்று வந்ததாலே நின் அருமை எமக்குப் புரிகிறது
ஞானமந்திரமாய் பலநிதி வந்தாலும் எம்
ஞானரஞ்சிதம் கலாநிதி போல் வருமா
நின் புகழ் ஓங்கவும் நீடூழி வாழவும் வாழ்த்துகின்றோம்.

**சேவை விவரங்கள்**

கிளி/ திருவையாறு ம.வி - 07.09.1992 - 29.11.1998
யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம் - 30.11.1998 - 14.02.2010
யா/மீசாலை விக்னேஸ்வர ம.வி - 15.02.2010 - 13.05.2019

வாழ்த்துவோர் :- பாடசாலை சமூகம்,
மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயம்.

---

வரணி சிட்டிவேரம்

## கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்

## அறிவித்தல்

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள்

**ஆலய வருடாந்த மஹோற்சவம்**

**20.05.2019** இலிருந்து **02.06.2019** வரை நடைபெற இருக்கின்றது. ஆகவே அவ்வுற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைத்து வியாபாரம் செய்வதற்குரிய கேள்விப்பத்திரம் - விண்ணப்பம் வழங்கும் நிகழ்வு **17.05.2019** புதன்கிழமை முற்பகல் **10.00** மணிக்கு நடைபெற்று உடனடியாகவே தீர்மானம் எடுக்கப்பட்டு கடைகள் ஏலத்தில் வழங்கப்படும். ***ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.***

**077 116 7558** **தலைவர், ஆலய பரிபாலன சபை**

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 13.04.2019
சனிக்கிழமை இறைபதம்
அடைந்த எமது
குடும்பத்தலைவர்

**அமரர் வேலன் கந்தையா (கணேஷ்)**

(ஓய்வு பெற்ற முன்னாள்
யாழ் மாநகரசபை ஊழியர்)

அன்னை மடியில் 16.10.1932
ஆண்டவன் அடியில் 13.04.2019

அவர்களது மறைவுச்செய்தி கேட்டு வந்து பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் அத்துடன் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசி மூலம் இரங்கலைத் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (13.05.2019) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குமரகோட்டம் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

**குடும்பத்தினர்.**
**077 583 5350**

---

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 11 |
| 08 | 05 |
| 1943 | 2019 |

## குமாரசுவாமி பிரேமகுமார்

***(கட்டடக்கலைஞர்)***

யாழ். வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் பொன்னையா ஒழுங்கை ஆனைக்கோட்டை மற்றும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசுவாமி பிரேமகுமார் 11. 05.2019 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி கமலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மகனும், ஜோசியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கமலகுமார் (முன்னாள் கணக்காய்வாளர் இ.போ.ச. கனடா), உதயகுமார் (ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்) மற்றும் ஆ.ஜெயக்குமாரி, ராஜகுமார் (ஓய்வுநிலை விமானப்படை அதிகாரி, கனடா), காலஞ்சென்றவர்களான பாலகுமார் (கடற்படை அதிகாரி), விஜயகுமார் (தொழிலதிபர், கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரனும், புவனேஸ்வரி (கனடா), நளினி (கனடா), காலஞ்சென்றவர்களான ஆலாலசுந்தரம், அற்புதரஞ்சிதம் மற்றும் லெனோர் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், ஹரேந்திரன் - கலா (கனடா), தர்ஷினி - விஜயகுமார் (கனடா), பிரதாபன் - கவிதா (சுவிஸ்), ஜனார்த்தனன் - அனுஷா (ஆஸ்திரேலியா), தாரினி - கதிர்காந்தன் (கனடா) ஆகியோரின் சிறியதந்தையும், ரஞ்சித்குமார், பிரியா - ரமணா (லண்டன்), சுரேஸ்குமார் - சாயினி (கனடா), கிரிஷ், ரபி (கனடா) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொன்னையா ஒழுங்கை,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்:**
**திருமதி ஜெயகுமாரி ஆலாலசுந்தரம்**
**(சகோதரி)**
**0212213258**

## குண்டுத்தாக்குதல்...

அச்சமடையத் தேவையில்லை என்று பாதுகாப்புத் தரப்பினர் பலமுறை அறிவித்தும், மக்கள் மத்தியில் அச்சம் நீங்க வில்லை.

கொழும்பு நகரின் முக்கிய இடங்களில் இன்றைய தினம் தாக்குதல் நடத்தப்படக் கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம், வெள்ளவத்தை நகரம், நாவலப்பிட்டிய நகரம், பஞ்சிகாவத்தை ஆகிய இடங்களில் இன்று காலை 9 மணிக்கும் மதியம் 1 மணிக்கும் இடையில் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவும் இன்றைய தாக்குதல் தொடர்பான முன்னெச்சரிக்கையை நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தனர். இது தொடர்பான தகவல் மக்கள் மத்தியில் பரவியது.

கொழும்பு நகரில் மக்கள் நேற்றைய தினமும் தமது பொழுதை அச்சத்துடன் கழித்தனர். இன்றைய தினம் என்ன நடக்குமோ என்ற பயத்தில் அவர்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாடசாலைகளை இன்று இடம்பெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இருப்பினும் மாணவர்களை அனுப்புவதில் பெற்றோர்கள் தயக்கம் காட்டுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

கொழும்பு மாவட்டம் முழுவதிலும் அச்சமான சூழலே காணப்படுகின்றது. (ஒ.5)

## வடகிழக்குக்கு...

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு குறித்து 2017 ஆம் ஆண்டில் இருந்து தகவல் கிடைத்தது. ஆனால் இந்த அமைப்பு பயங்கரவாத அமைப்பா என்பதில் எமக்குக் கேள்வி இருந்தது. சில இறுக்கமான கொள்கைகளுடன் அவர்கள் செயற்படுவது மட்டுமே அறிவிக்கப்பட்டது. பாதுகாப்பு சபையில் இந்த விடயம் குறித்து 13 தடவைகள் பேசப்பட்டதாக என்ற எண்ணிக்கை தெரியவில்லை. ஆனால் சில சந்தர்ப்பங்களில் நாம் இந்த விடயங்கள் குறித்து பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் தெரிவித்தோம்.

ஆனால் ஆழமாக எந்த விடயங்களும் பேசப்படவில்லை. இந்த தாக்குதல் நடத்தப்பட சகல தரப்பினரதும் பலவீனம் காரணம் என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் யார் குற்றவாளி என்பதை என்னால் கூற முடியாது. நான் உட்பட பாதுகாப்புபடை பிரதானிகளும் அரசியல் பிரதானிகள் என்று அனைவரும் இதில் குற்றவாளிகள் தான். அதனை நான் ஏற்றுகொள்கின்றேன்.

21 ஆம் திகதி சம்பவம் இடம்பெற்றும் எமக்கு 24 ஆம் திகதி தான் இவற்றை கையாளும் அதிகாரம் வழங்கப்பட்டது. எமது புலனாய்வு தரப்பில் சில குறைபாடுகள் இருந்தது. சிறந்த சில புலனாய்வு அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டமை புலனாய்வு செயற்பாடுகள் குறைக்கப்பட்டமை என்பன சில பின்னடைவுகளை ஏற்படுத்தியது. அதேபோல் இராணுவமாக எம்மால் சுயாதீனமாக செயற்பட அதிகாரம் இல்லாமையே இதற்கு காரணம். எனினும் 24 ஆம் திகதியில் இருந்து இதுவரை இராணுவத்தின் செயற்பாட்டால் தான் குற்றவாளிகளை கைதுசெய்ய முடிந்துள்ளது. இதனை விளங்கிக்கொள்ள வேண்டும்.

21 ஆம் திகதி தாக்குதலை நடத்தியவர்கள் இந்தியாவில் இருந்தே அதிகளவில் திட்டங்களை வகுத்துள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டுள்ளவர்களின் வாக்குமூலங்களில் எட்டுப்பேர் தம்மை தற்கொலைதாரிகளாக அடையாளப்படுத்தியுள்ளனர் - என்றார். (ஒ.5)

## ஸஹ்ரானுடன்...

சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி மாத்தளைப் பகுதியில் வைத்து சந்தேக நபரைக் கைது செய்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. சந்தேகநபர் கட்டாரிலிருந்து கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி இலங்கைக்கு வந்துள்ளதுடன், ஏப்ரல் 19 ஆம் திகதி காத்தான்குடி பகுதிக்குச் சென்றுள்ளார். அதன் பின்னர் அவர் தாக்குதல்களைத் தொடர்ந்து அந்த காணொலியை ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு வழங்கியுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்தே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு உரிமைக் கோரியுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கூறுகின்றனர். (ஒ.5)

## உப்பு...

கல் உற்சவத்தின் முன் நிகழ்வாக, காட்டு விநாயகர் கோவிலில் ஏழு நாள்கள் உப்பு நீரில் விளக்கு எரிப்பதற்கு கடலில் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இந்த ஆண்டு பாதுகாப்பு ஒழுங்குகளுடன் கோவில் பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று காட்டு விநாயகர் கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

நிர்வாகத்தின் உப தலைவர் ச.கனகரத்தினம் தெரிவித்ததாவது:

உப்பு நீரில் விளக்கெரியும் அற்புதக் காட்சியைக் காண்பதற்காகத் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வுஇன்றுதிங்கட்கிழமைமுள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தில் ஆரம்பமாகும். அங்கு பூசைகளைத் தொடர்ந்து கடல்நீரில் தீர்த்தம் எடுக்க அடியவர்கள் சகிதம் பூசகர் செல்வார். தண்ணீர் ஊற்று சிலாவத்தை வழியாகச் சிலாவத்தை கடற்கரையைச் சென்றடைந்து தீர்த்தக்கரையில் தீர்த்தம் எடுக்கப்பட்டு அதே வழியாக முள்ளியவளை காட்டு விநாயகர் கோவிலுக்குத் தீர்த்தம் எடுத்து வரப்படும். அதனைத் தொடர்ந்து மடை பரவப்பட்டு உப்புநீரில் விளக்கெரியும் காட்சி அற்புத காட்சி ஆரம்பமாகும். இரவு பகலாகத் தொடர்ந்து ஏழு நாள்கள் உப்புநீரில் எடுக்கப்பட்ட தீர்த்தத்தில் விளக்கெரியும். காலை மாலை பூசைகள் சிறப்புற நடைபெறும். இறுதியாக எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காட்டுவிநாகர் கோவிலில் பொங்கல் நிகழ்வு சிறப்புற நடைபெறும். தற்போது மக்கள் கூட்டத்துக்குப் பொருத்தமில்லா காரணத்தால் மக்கள் பக்குவமாக வழிபாடுகள் மேற்கொள்ளக்கூடிய வகையில் பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கோவிலுக்கு வரும் பக்தர்கள் பெரும் பொதிகளைக் கொண்டுவராமல் தவிர்த்துக்கொள்ளுங்கள். வழிபாட்டுக்கு வேண்டிய அர்ச்சனைப் பொருள்களை கோவிலில் பெற்றுக்கொள்ளலாம். கோவிலுக்கு வரும் அனைவரும் அடையாள அட்டைகளுடன் வாருங்கள். சந்தேகங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை உப்புநீரில் விளக்கெரியும் தீபம் பூசை வழிபாடுகளுடன் பக்தர்கள் புடைசூழ வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு மறுநாள் (எதிர்வரும் திங்கட்கிழமை) வைகாசி விசாகப் பொங்கல் பெருமெடுப்பில் இடம்பெறும். அன்றும் அதற்கு அடுத்தநாளான செவ்வாய்க்கிழமைவரை உப்புநீரில் விளக்கெரியும் அதிசயம் தொடர்ந்து கொண்டிருக்கும். லட்சக்கணக்கான பக்தர்கள் அங்கு ஒன்றுகூடுகின்றமையும் பொங்கல் பொங்கி அம்மனுக்குப் படைத்து வழிபடுகின்றமையும் சிறப்புக்குரியது.

(த-ரி3,222)

## வர்ணம் தீட்டுவோம்



## திறந்த மனது




மூடி வைத்திருப்பதால்
யாதொரு பயனுமில்லை
மனதைத் திறந்து வைத்திடுங்
அக்கம் பக்கமுள்ளவர்கள்
உங்கள் மனதை அறியாமல்
போனால்
பரவாயில்லை.

வருத்தப்படாதீர்கள்
அதற்கு வருந்த நேர்ந்தால்
தானாக மூடிக்கொள்ளும் மனக்கதவு.
எங்கும் எப்போதும் நாலுவார்த்தை
நல்லதையே பேசுங்கள்.

உள்ளத்தில் கபடமும் கள்ளமும்
குடி கொண்டு விட்டால்
இருண்மைச் சூழ்ந்து பாழ்ப்படும்
பளிங்கு மனது.
நல்மனதுக்குத்தான்
நாகரிகம் தெரியும் நல்வழி அகப்படும்.
தீயவைகளை அண்ட விடாதீர்கள்.

சிலகாலமே வாழ்க்கை
அது வாழ்வதற்கென்று
அமையப் பெற்றட்டும்.
ஆதலால்
மனதைத் திறந்தே
வைத்திருங்கள்.

## அழகாக விரும்பிய குதிரை



ஒரு ராஜா அழகான குதிரை ஒன்றை வளர்த்து வந்தார்.

அந்தக் குதிரைக்கு தான் இன்னும் அழகாக வேண்டும் என்கிற ஆசை வந்து கடவுளிடம் வேண்டியது.

கடவுள் குதிரையின் முன் தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்" என்றார்.

குதிரை நான் இன்னும் அழகாக வேண்டும்... அதனால், என் கழுத்தை நீளமாகவும், கால்களை நீளமாகவும் படைக்க வேண்டும் என்று கேட்டது.

கடவுளும் குதிரை கேட்ட மாதிரி கழுத்தையும், கால்களையும் நீளமாக படைத்தார்.

குதிரை இப்போது ஒட்டகம் மாதிரி ஆகிவிட்டது.

தன் உருவத்தை பார்த்த குதிரைக்கு அழுகை வந்து விட்டது.

"அய்யோ கடவுளே! என்னைப் பழைய மாதிரியே மாற்றிவிடுங்கள்" என்று கேட்டது அந்தக் குதிரை.

"நீ விரும்பிய மாதிரிதானே உன்னைப் படைத்துள்ளேன், பிறகு ஏன் வருத்தப்படுகிறாய்?" என்று கேட்டார் கடவுள்.

பின்னர் அவரேத் தொடர்ந்து, "ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாகப் படைத்துள்ளேன். உன்னால் தரையில் வேகமாக ஓட முடியும், ஒட்டகத்தால் பாலைவனத்தில் விரைவாக ஓடமுடியும், அதிகமாகப் பொதி சுமக்க முடியும். அழகு வேண்டும் என்று மேலும் மேலும் ஏதாவது செய்ய நினைத்தால் இப்படித்தான் போய் முடியும்" என்றார்.

அழகு என்பது உருவத்தில் அல்ல, நீ செய்யும் செயலில்தான் இருக்கிறதை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# அஜந்தனின் வழக்கு முன்வைக்கும் பாடம்

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு என்ற இடத்தில் காவல் அரணில் இருந்த இரு பொலிஸாரை வெட்டியும் சுட்டும் கொன்றகுற்றச்சாட்டில்பயங்கரவாதத்தடுப்புச்சட்டத்தின்கீழ்கைது செய்துதடுத்துவைக்கப்பட்டிருந்தமுன்னாள்போராளியானஅஜந் தன் நேற்று முன்தினம் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப் பட்டார்.

வவுணதீவைச் சேர்ந்தவர் அஜந்தன் எனப்படும் கதிர்காமத்தம்பி இராசகுமாரன். விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளி. வவுணதீவில்2018நவம்பர்மாதம்காவலரணில்நின்றஇருபொலி ஸார்வெட்டிக்கொல்லப்பட்டதைத்தொடர்ந்துஇவர்சந்தேகத்தின் அடிப்படையில்கைதுசெய்யப்பட்டுபயங்கரவாதத்தடைச்சட்டத் தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு வெடிப்புக்கள் மற்றும் படு கொலைகளை அடுத்து வேகவேகமாக நடந்த கைதுகளில் எதிர்பா ராத விதமாக வவுணதீவு பொலிஸாரின் கொலையையும் உயிர்த்த ஞாயிறுசதிகாரர்களேசெய்தனர்என்பதும்வெளிப்பட்டது.உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்களின் சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்ப டும் ஸஹ்ரான் ஹாசிமின் வாகனச் சாரதியே இந்த உண்மையைச் சொன்னார். தற்கொலைக் குண்டுவெடிப்புகளுக்கு முன்னோடி நடவடிக்கையாகஇந்தக்கொலைகள்நிகழ்த்தப்பட்டனஎன்றுஅவர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்தார் எனக் கூறப்படுகின்றது.

இந்தச் செய்தி ஊடகங்களில் வெளியானதைத் தொடர்ந்து வவுண தீவுக்கொலைகள்தொடர்பில்கைதுசெய்யப்பட்டுதடுப்பில்வைக் கப்பட்டுள்ள அஜந்தனை விடுவிக்கவேண்டும் என்று தமிழ் அரசி யல்வாதிகள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தனர். பல்வேறு அமைப்புக்களும்அவரைவிடுவிக்க வேண்டும்என்றும்அழுத்தம் கொடுத்தன.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அஜந்தனை நீதி வான்வீட்டிற்குஅழைத்துச்சென்றபயங்கரவாதத்தடுப்புப்பிரிவுப் பொலிஸார் அவரைப் பிணையில் விடுவிப்பதற்கான தமது சம்ம தத்தைவழங்கினர்.அவர்பிணையில்விடுவிக்கப்பட்டார்.அவரை அவரது வீட்டில் கொண்டு சென்று விட்டுவிட்டு பொலிஸார்சென் றுவிட்டனர். வேறு எதுவும் பேசவில்லை.

கண்கள் மறைக்கப்பட்ட குதிரையைப் போன்று விடுதலைப் புலி களின் மீள் எழுச்சி என்பதை நோக்கியே ஓடிக்கொண்டிருந்த பயங் கரவாதப்புலனாய்வுப்பொலிஸ்பிரிவினர், இருபொலிஸார்கொல் லப்பட்டதும் முன்னாள் போராளி ஒருவரைத் தேடிக் கைது செய்து வைத்துக்கொண்டனர். கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தமிழ்ப் பொலிஸாராக இருந்தபோதும் புலிகள் என்கிற ஒரு கோணத்தைத் தாண்டி உய்தறியும் திறனற்றவர்களாகப் புலனாய்வுப் பிரிவினர் இருந்துள்ளனர். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் 4ஆம் மாடி என்பது சித்திரவதைகளுக்குப் பெயர்போனது. கடந்தகாலங்களில் இந்தப் பிரிவினரின் சித்திரவதைகள் குறித்துப் பல தகவல்கள் பன் னாட்டுமட்டத்தில்வெளியாகியிருக்கின்றன. பிணையில்விடுவிக் கப்பட்ட அஜந்தன் கூட தான் 4ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட் டிருந்தார் என்பதைக் கூறும்போது, ஒரு மர்மச் சிரிப்புடன் "4ஆம் மாடி என்றால் உங்களுக்குத் தெரியும்தானே" என்று செய்தியாளர்க ளைப்பார்த்துக்கேட்கிறார்.அவரும்சித்திரவதைசெய்யப்பட்டிருக் கிறார்என்பதற்கானவாக்குமூலமாகத்தான்அதனைப்பார்க்கவேண் டும். எனக்கு ஏற்பட்ட இந்த நிலமை வேறு யாருக்கும் ஏற்படக்கூ டாது என்கிற அவரது வாசகம் இதனை இன்னும் உறுதி செய்கிறது.

இவ்வாறுபயங்கரவாதத்தடுப்புச்சட்டத்தின்கீழ்குற்றமற்றவர்களைச் சந்தேகத்தின்பேரில்பிடித்து அடைத்து வைத்துச்சித்திரவதை செய் வது இன்று நேற்று நடக்கின்ற விடயமல்ல என்பது உலகறிந்த விட யம். இதனாலேயே இந்தச் சட்டம் வேண்டாம் என்று மீண்டும் மீண்டும்வலியுறுத்துகின்றோம். இதனாலேயே இந்தச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள்விடுவிக்கப்பட வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலி யுறுத்துகின்றோம்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பிழையான முறையில் கையாண்டார்கள் என்பதற்கு அஜந்தனின் விடயம் ஆகப் பிந்திய உதாரணம். இந்த நடவடிக்கை யால் தனது குடும்பப் பொருளாதாரம் முற்றிலுமாகப் பாதிக்கப்பட் டுள்ளது என்கிறார் அஜந்தன். ஆனால் கொழும்பு அரசோ பயங்கர வாதத் தடுப்புப் பிரிவினரோ அது பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்பட் டதாகத்தெரியவில்லை.தவறாகக்கைதுசெய்துஅஜந்தனைத்தடுத்து வைத்திருந்ததற்காகக் குறைந்தபட்சம் வருத்தம்கூடத் தெரிவிக் கவில்லை. இதுதான் இந்த நாட்டின்மக்களாட்சியும் பேரினவாதச் செயற்பாடும் என்பது அப்பட்டமாகத் தெளிவாகியுள்ளது. எனவே இனியாவது இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அடியோடு நீக்கிவிட்டு, அஜந்தனைப் போன்றே அரசியல் கைதிகளாகத் தடுப் பில் உள்ள அரசியல் கைதிகள் பலரையும்கூட விடுவிப்பதற்கு கொழும்புஉடனடியாகநடவடிக்கைஎடுக்கவேண்டும்.அத்தோடு அரச படையினரின் அத்துமீறலால் பாதிக்கப்பட்ட இவர்க ளுக்கு,இழப்பீடு வழங்கவும் கொழும்பு முன்வரவேண்டும்.



# எல்லாமே குழப்பம்தான்

இந்துமதி

தற்போது வெளியாகும் தகவல்களைப் பார்க்கும்போது நாடு பயங்கரமான தொரு கட்டத்தினுள் தள்ளப்பட்டுள் ளமை தெளிவாகத் தெரிகின்றது. தற்கொலைக் குண்டுத் தாக்குதல் கள் தொடர்பான தகவல்கள் ஏற்கனவே தெரிந்திருந் தும் அரசு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள் ளாததால் அப்பாவிகள் பலரின உயிர்கள் பரிதாபமான வகையில் பறிக்கப்பட்டு விட்டன. இழந்த உயிர் களைத் திரும்ப வரவழைப்பதற்கு எவரால்தான் முடி யும்? ஆனால் ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகள் சிலரும் வெளிவிடுகின்ற அறிக்கைகள் வெந்த புண் ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பானதாகக் காணப்ப டுகின்றன. இவற்றின் காரணமாக நாட்டு மக்கள் செய்வதறியாத நிலையில் தவித்து வருகின்றனர்.

**தண்டனை அவசியம்**

இங்குள்ள சிலர் பதவி ஆசை காரணமாக ஐ.எஸ்.ஐ. எஸ்சுடன் இணைந்து தற்கொலைக் குண்டுத் தாக் குதல்களை மேற்கொண்டனர் என்று அமைச்சர் அகில விராஜ்காரியவசம் கூறியதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. அரசு உடனடியாகவே விசாரணைகளை மேற்கொண்டு உரியவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதில் தராதரம் பார்த்தல் ஆகாது. பொது மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதுதான் ஓர் அரசின் பிரதான கடமையாகும். இதிலிருந்து அரசு தவறும்போது நாட்டில் அழிவுகள் ஏற்படுவதுடன் அமைதியும் சீர்கு லைந்துவிடும். இதற்கு நாசகார சக்திகளை ஒடுக்கி விடுவது அவசியமானதாகும். ஆனால் இந்த நாட் டைப் பொறுத்தவரையில் பாரபட்சமற்ற நடவடிக்கை களை எதிர்பார்க்க முடியாதுள்ளது. அது மட்டுமல் லாது அரசியல் தலைவர்கள் பொய்யுரைப்பதிலும் வல்லவர்களாகக் காணப்படுகின்றனர். கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு கூறுமளவுக்கு நிலைமை மோசமான கட்டத்தை எட்டி நிற்கின்றது.

**மகிந்த, கோத்தா உதவி**

அதேவேளை தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் வளர்ச்சிக்கு முன்னாள் அரச தலைவர் மகிந்தவும் அப்போதைய பாதுகாப்புச் செயலரான கோத்தபாய ராஜபக்சவும் பெரிதும் உதவி புரிந்துள்ளனர் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன அதிர்ச்சி தரும் தகவ லொன்றை வெளியிட்டுள்ளார். இதற்கு ஆதாரமாகச் சில ஒளிப் படங்களையும் அவர் வெளியிட்டுள்ளார். அந்த அமைப்பின் செயலராக இருந்தவர் உட்பட வேறு சிலரைப் புலனாய்வாளர்கள் எனக் கூறி மாதாந்தச் சம்பளம் வழங்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். தற்போது வெளியாகியுள்ள தக வல்களின் அடிப்படையில் தௌஹீத் ஜமாத் அமைப் பின் செயலராக அடையாளம் காட்டப்பட்டவர் தற் கொலைக் குண்டுதாரிகளில் ஒருவராகச் செயற்பட் டமை தெரியவந்துள்ளது. அவ்வாறாயின் இது தொடர்பான உண்மை நிலையைக் கண்டறிவதில் அரசு இனியும் தாமதிக்கக் கூடாது.

**அப்பாவிகளை இம்சைப்படுத்தக் கூடாது**

இந்த நிலையில் முப்படையினருக்கு அதிகளவில் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று வெளி விவகார அமைச்சர் தெரிவித்துள்ளமை கவனத்தில் கொள்ளத் தக்கது. பயங்கரவாதச் செயல்களை ஒடுக்கு வதற்கு படையினருக்கு அதிகாரங்களை வழங்குவ




தில் தவறொன்றுமில்லை. ஆனால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி அப்பாவி மக்களை இம்சைப்படுத்தக் கூடாது. இதனால் ஏற்கனவே நொந்து போயுள்ள மக்கள் மேலும் துன்பங்களை எதிர்கொள்ளவே செய்வார்கள்.

**அதிகாரப் போட்டி**

இதேவேளை நாட்டில் அரச தலைவர் தலைமை அமைச்சர் ஆகியோர் அதிகாரங்களைக் கொண்டி ருக்கின்றனர். அரச தலைவர் நிறைவேற்று அதிகா ரங்களைக் கொண்டிருந்தாலும் தலைமை அமைச் சர் நாடாளுமன்றத்தின் ஊடான அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றார்.

இவர்களிருவரும் இணைந்து செயற்படும்போது தான் நாட்டில் சீரான ஆட்சியை எதிர்பார்க்க முடியும். தற்போதுள்ள நிலையில் இவர்கள் இருவரும் இணைந்து செயற்படுவதாகத் தெரியவில்லை.இவர் கள் ஒருவரை மற்றொருவர் எதிரியாகவே பார்க்கின் றனர். இரண்டு அதிகார முனைகள் இருப்பதன் காரணமாகவே நாட்டின் பாதுகாப்பில் தொய்வு ஏற் பட்டதாக எதிரணியினர் குற்றம் காட்டுகின்றனர். பாதுகாப்புச் சபைக் கூட்டம் இடம்பெற்றபோது தாக்கு தல் இடம்பெறுமெனப்பலதடவைகள்கூறியபோதிலும் அரச தலைவர் அதை அலட்சியம் செய்துவிட்டார் என்று முன்னாள் இராணுவத்தளபதியான சரத் பொன்சேகா குற்றம்சாட்டியமை தொடர்பில் அரச தலைவர் உரிய பதிலை வழங்க வேண்டும். நாட்டு மக்களில் ஒரு சில அப்பாவிகள் அநியாயமாக உயி ரிழந்தமைக்கு அவர் காரணமாக இருந்திருப்பாரா யின் வரலாறு அவரை மன்னிக்க மாட்டாது. பொன் சேகா தவறான தகவலை வழங்கியிருந்தால் அவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அவர் தயங்கக் கூடாது.

**தமிழருக்கு ஆபத்து**

குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து வடபகுதியின் பாதுகாப்புக்கு மேலதிக இராணுவத்தினரை அனுப்பி வைக்குமாறு கூட்டமைப்பினர் தம்மிடம் கோரிக்கை விடுத்தனர் என்று அரசதலைவர் கூறியமை தொடர்பில் கூட்டமைப்பினர் விளக்கமாகப் பதிலளிக்க வேண் டும். இல்லையென்றால் மக்கள் கூட்டமைப்பு மீது தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொள்வார்க ளென்பதைக் கூறத் தேவையில்லை. இது எதிர்கா லத்தில் பெரும் பின்னடைவை கூட்டமைப்புக்கு ஏற்படுத்திவிடும்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கைதான மாணவர்க ளும் வேறொருவரும் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். முன்னாள் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினரானசிவாஜிலிங் கமும் விசாரிக்கப்படவுள்ளார் என்று தெரியவருகின் றது. அவசரகாலச் சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் தமிழர்களுக்கு இவை நல்ல சகுனங்க ளாகத் தெரியவில்லை. ஆக மொத்தத்தில் பார்க்கும் போது சகல வகையிலும் நாடு குழம்பிப் போய்க் கிடைப்பதையே காண முடிகின்றது.

# ஸஹ்ரானை வளர்த்தது ஆளுநர் ஹிஸ்புல்லாவே

*மங்களராமய விகாராதிபதி குற்றச்சாட்டு*

மட்டக்களப்பு, மே 13

கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே ஸஹ்ரான் செயற்பட்டார். ஹிஸ்புல்லா அதிகாரத்தைப் பயன்படுத்தி ஸஹ்ரானையும், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பையும் வளர்த்தார். இவ்வாறு மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி சுமணரத்ன தேரர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகளை அவர் நேற்றுச் சந்தித்தார். அதன் பின்னர் ஊடக சந்திப்பு நடத்தினார். இதன்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஹிஸ்புல்லாவின் பணிமனையில் துப்பாக்கி சன்னங்களுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் அலுவலர் எடுத்துச் சென்றவை என்று கதை சொன்னார்கள். பொலிஸ் அலு வலர்கள் போகின்ற இடங்களில் இப்படி ஆயுதங்களை விட்டு வரமுடியுமா?

அப்பாவி தமிழ் அம்மாக்களின் பிள்ளைகளை பலாத்காரமாக கடத்திச் சென்றுள்ளார்கள். ஸஹ்ரான் குழுவினர் இவ்வாறு கொண்டு சென்று அவர்களை தற்கொலைக் குண்டுதாரிகளாக மாற்றியுள்ளனர். இதனை அனுமதிக்க முடியாது. இனிமேல் இவ்வாறு செயற்பட இடமளிக்க முடியாது.

நாட்டில் எல்லோருக்கும் பொதுவான சட்டம் இருக்க வேண்டும். அதை ஒவ்வொருவருக்கும் பிரித்து வழங்கியதன் பிரதிப லன் தான் இது. நாட்டை அவமானப்படுத்தும் விதமாக ஷரியா சட்டத்துக்கு பொருத்தமான விதத்தில் காதிச் சட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர், மாவட்டச் செயலர், கல்வி பணிப்பாளர்கள் என்று சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக எதிர்வரும் புதன்கிழமை தெரிவிக்கவுள்ளோம். அதன் பிற்பாடு அவர்கள் சரியான தீர்வை முன்வைக்காவிடின் நாங்கள் வீதிக்கு இறங்க வேண்டி ஏற்படும்.

எல்லா வீட்டிலும் வாள்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. புல் வெட்டுவதற்கு எனவும் பெண்களுடைய பாதுகாப்பு எனவும் அரசியல்வாதிகள் தெரிவிக்கின்றனர். எந்த இடத்திலாவது முஸ்லிம் பெண்களை தமிழ், சிங்கள இளைஞர்கள் பலாத்காரமாக கொண்டு வந்துள்ளனரா? முடிந்தால் சொல்லுங்கள். ஆனால் எமது பெண்பிள்ளைகள், சிறுவயது பிள்ளைகளை முஸ்லிம்கள் கடத்திச் சென்று மதம் மாற்றி ஆயுதக்குழுக்களில் இணைக்கின்றனர். காரணம் தமிழ் பிள்ளைகள் திறமைசாலிகள். அதனைக் கருத்தில் கொண்டு கடத்திச் செல்கின்றனர் - என்றார். (ஒ.5)



## வவுனியா நகரில் ரயர் எரித்தவர் இராணுவத்தால் கைது

வவுனியா,மே 13

வவுனியா செட்டிக்குளம் நகரப் பகுதியில் ரயர் எரித்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினமிரவு 10 மணியளவில் அவர் ரயர் எரித்தார் என்று குற்றஞ்சாட்டி நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

இளைஞர்கள் இருவர் அங்கு ரயர் எரித்துள்ளனர். இராணுவத்தினரைக் கண்டதும் ஒருவர் ஓடிவிட்டார்.

மற்றைய நபர் கைது செய்யப்பட்டார்.

வவுனியா முதலியார்குளம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவரே கைது செய்யபட்டார்.

அவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணை நடக்கிறது என்று செட்டிக்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடந்த 21ஆம் திகதிய வன்முறைகளின் பின்னர் வடக்கில் பாதுகாப்புப் படையினரதும் பொலிஸாரினதும் சோதனை தீவிரமாகியுள்ளது. சந்தேகநபர்கள் கைது செய்யப்படுகின்றனர். (த-110)

## வதிவிட நுழைவிசைவுக்கு புலனாய்வுப் பிரிவின் அனுமதி அவசியம்

கொழும்பு, மே 13

வெளிநாட்டவர்கள் இலங்கையில் வதிவிட நுழைவிசைவைப் பெற்றுக் கொள்வதற்கு, அரச புலனாய்வுச் சேவையின் அனுமதி அவசியம் என்ற நடைமுறையைக் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது, வதிவிட நுழைவிசைவுகளை, பெற்றுக் கொள்வதற்கு உள்துறை அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிகள் பெறப்படும் நடைமுறைக்கு மாறாக, அரச புலனாய்வுச் சேவையின் அனுமதியும் அவசியம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்துக்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் இலங்கையில் நுழைவிசைவு காலாவதியான நிலையில் தங்கியிருப்பதாக கிடைத்துள்ள தகவல்களை அடுத்து, குடிவரவுத் திணைக்களம் கடுமையான நுழைவிசைவு நடைமுறைகளை கடைப்பிடிக்கவுள்ளது.

பன்னாட்டுப் பொலிஸாரின் (இன்ரபோல்) கறுப்புப்பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்கள் உள்ளிட்டவர்கள் இலங்கையில் வதிவிட நுழைவிசைவைப் பெற்றுக் கொள்வதை தடுப்பதற்கே, அரச புலனாய்வுச் சேவையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. (ஒ.5)

## பதில் பாதுகாப்பு அமைச்சரை நியமிப்பாரா மைத்திரிபால?

*அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு*

கொழும்பு, மே 13

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மூன்று நாள் பயணமாக சீனாவுக்கு இன்று செல்லவுள்ள நிலையில், பதில் பாதுகாப்பு அமைச்சரை அவர் நியமிப்பாரா என்ற கேள்வி அரசியல், இராஜதந்திர வட்டாரங்களில் எழுந்துள்ளது.

கூட்டு அரசு பதவியில் இருந்த ஆரம்ப காலகட்டங்களில், அரச தலைவர் வெளிநாடு செல்லும் போது, பதில் பாதுகாப்பு அமைச்சரை நியமித்து வந்தார். எனினும், அண்மைக்காலமாக அவர் பதில் பாதுகாப்பு அமைச்சரை நியமிக்காமலேயே வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

கடைசியாக, அவர் சிங்கப்பூரில் தங்கியிருந்த போது, ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அப்போது, பதில் பாதுகாப்பு அமைச்சராக யாரும் நியமிக்கப்படாததால், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க பாதுகாப்புச் சபை யை கூட்டி முடிவுகளை எடுப்பதற்கு, முப்படை களின் தளபதிகளும் அதிகாரிகளும் சரியான ஒத்துழைப்பை வழங்கவில்லை. இதனால், ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெடுப்பதில் தாமதங்கள் ஏற்பட்டன.

இந்தநிலையில், இலங்கை இன்னமும் பதற்றத்தில் இருந்து முற்றிலுமாகவே வெளிவராத நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ள எடுத்து முடிவு அரசியல், இராஜதந்திர வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த முறையாவது அவர், வெளிநாடு செல்லும் போது பதில் பாதுகாப்பு அமைச்சரை நியமிப்பாரா அல்லது சீனாவில் இருந்தபடியே பாதுகாப்புப் படைகளின் தளபதிகளுடன் நேரடியான தொடர்பில் இருப்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. (ஒ.5)

## முஸ்லிம் பெண்களின் உரிமை சாவடிகளில் மீறப்படுகின்றன

*பிரதேச சபை உறுப்பினர் குற்றச்சாட்டு*

மன்னார், மே 13

சோதனைச்சாவடிகளில் முஸ்லிம் பெண்களின் உரிமைகள் மீறப்படுகின்றன என்று முசலி பிரதேச சபை பெண் உறுப்பினர் தஸ்லீமா குற்றச்சாட்டியுள்ளார்.

நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் முஸ்லிம் பெண்கள் பல இன்னல்களை எதிர்கொள்ளவதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு முஸ்லிம் பெண்கள் முகத்தை முழுவதுமாக மூடும் புர்காவுக்கு அரசு தடைவிதித்துள்ளது. ஆனால் ஹிஜாப் மற்றும் பர்தாவுக்கு அரசு தடை விதிக்கவில்லை. சோதனைச் சாவடிகளில் பாதுகாப்புத் தரப்பினர் ஹிஜாப் மற்றும் பர்தா அணிந்து செல்லும் முஸ்லிம் பெண்களிடம் அவற்றை அகற்றுமாறு வற்புறுத்துகின்றனர். சோதனைக் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகிறார்கள். வில்பத்து ஊடாக புத்தளம் செல்லும் மறிச்சுக்கட்டி சோதனைச்சாவடி பர்தா மற்றும் ஹிஜாப் அணிந்து செல்லத் தடை விதிக்கப்பட்டு ள்ளது. அந்த இடத்தில் முழு உடற் சோதனை நடத்தப்படுகிறது. முஸ்லிம் பெண்களின் உரிமைகளை மீறும் விதத்தில் பதுகாப்புத் தரப்பினர் செயற்படுகிறார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-213)

# மைத்திரியின் மகனின் திருமணம் அலைபேசிக்கு அனுமதியில்லை

*தஹம் சிறிசேனவுக்கும் அதே நிலமை*

கொழும்பு, மே 13

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹம் சிறிசேனவின் திருமண நிகழ்வில் பங்கேற்றவர்கள், அலைபேசிகளை வைத்திருக்க அனுமதிக்கப்படவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மணமகன் தஹம் சிறிசேன கூட அலைபேசி கொண்டு செல்ல அனுமதிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹம் சிறிசேனவுக்கும், பிரபல தொழிலதிபர் அதுல வீரரத்னவின் மகள் நிபுணிக்கும், கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு ஹில்டன் விடுதியில் திருமணம் இடம்பெற்றது.

முன்னதாக சங்ரிலா விடுதியிலேயே நடக்கவிருந்த இந்த திருமணம், அங்கு குண்டுவெடிப்பு நிகழ்ந்ததை அடுத்து ஹில்டன் விடுதிக்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த திருமண நிகழ்வில் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்றனர். அரசியல்வாதிகள் எவரும் அழைக்கப்படவில்லை.

திருமணத்துக்கு வந்திருந்தவர்களிடம் இருந்து, விடுதியின் மண்டபத்துக்குள் நுழைய முன்னரே, அலைபேசிகளை ஒப்படைத்து விட்டு செல்லுமாறு கேட்கப்பட்டனர்.

இதன் காரணமாக திருமணம் தொடர்பான எந்தவொரு படங்களும் சமூக ஊடகங்களிலோ, ஊடகங்களிலோ வெளியாகவில்லை. படங்கள் வெளியாவதை தடுப்பதற்காகவே, இவ்வாறு அலைபேசிகள் திருமண மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

அதேவேளை திருமணத்தை முன்னிட்டு நூற்றுக்கணக்கான படையினர் ஹில்டன் விடுதியைச் சுற்றி பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர். சாதாரண உடையிலும் ஏராளமான படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டனர். (ஒ.5)



# பொலித்தீன் பைகளுக்கு பதிலாக துணியிலான பைகள் அறிமுகம்

*சாவகச்சேரி, மே 13*

**சாவகச்சேரி நகரை பொலித்தீன் அற்ற நகரமாக்கும் திட்டத்தின் கீழ் வர்த்தக வியாபார நிலையங்களில் பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக துணியிலான பைகள் விற்பனை செய்வதற்காக அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.**

அதற்கான ஆரம்பநிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் சந்தை விற்பனைப் பிரிவுகளில் விநியோகிப்பதற்காக சந்தை வியாபாரிக்கு துணியிலான பைகளை கையளித்துள்ளார்.

நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பொலித்தீன் பைகள் பிரதி திங்கட்கிழமைகளில் விற்பனை செய்வது நிறுத்தப்பட்டுள்ள நிலையில் தற்போது அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள துணியிலான பைகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு விரைவில் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களில் பொலித்தீன் விற்பனை நிறுத்தப்படுமென வர்த்தகர்களும் வியாபாரிகளும் தெரிவித்தனர். (ஜ-9)



## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,மே 13

யாழ்ப்பாணம் மத்தி கல்லூரியில் க.பொ.த உயர்தரம் 2021 இல் கல்விபயில தகுதி வாய்ந்த மாணவர்களிடம் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கலை,வர்த்தகம்,விஞ்ஞானம், தொழில்நுட்பப் பாடங்களில் கல்வியைத் தொடர விரும்புவோர் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கு மாறு கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஜ)

## திருடினார் என இளைஞன் கைது

வவுனியா,மே 13

திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். வவுனியா நெளுக்குளம் பொலிஸாரால் சந்தேகநபர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல்வேறு திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில் நேற்றுமுன்தினம் மணிபுரம் பகுதியில் உள்ள வீட்டில் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றும் களவாடப்பட்டது. இதனையடுத்து நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது மணிபுரம் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞனைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து மணிபுரத்தில் களவாடப்பட்ட தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் மேலதிக விசாரணைகளைமேற்கொண்ட பொலிஸார் அவரை வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-110)

*யாழ். மாநகரசபையின்*

## அபிவிருத்தித் திட்டத்தின் இறுதி மதிப்பீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 13

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 27 வட்டாரங்களுக்குமான இறுதி மதீப்பீட்டு நிகழ்வு மாநகர பொது நூலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் இடம்பெற்றது.

நிகழ்வில் மாநகரசபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்துகொண்டு நிகழ்ச்சி த்திட்டத்தின் நோக்கம் குறித்தும் விரிவாக விளக்கினார்.

வட்டார அடிப்படையிலான தேவைமதிப்பீடும் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித்திட்டமும் தொடர்பில் வட்டார ரீதியில் தனித்தனியே மதிப்பீடு செய்யும் பணிகள் கடந்த மாதம் முழுவதும் இடம்பெற்றன. அதன் இறுதி மதிப்பீட்டு நிகழ்வே தற்போது நடைபெற்றது.

இவ் இறுதி மதிப்பீட்டு நிகழ்வில் 27 வட்டாரங்களிலிருந்தும் வட்டாரரீதியாக தெரிவு செய்யப்பட்ட குழுவின் 5 பிரதிநிதிகள் வீதம் கலந்து கொண்டிருந்ததுடன் தாம் ஏற்கனவே முன்மொழிந்த திட்டங்களிலிருந்து வாக்களிப்பு முறையில் முன்னிலையடிப்படையில் திட்டங்களை தெரிவு செய்தனர்.

மேற்படி செயற்பாட்டை மாநகரசபையின் அலுவலர்கள் முன்னெடுத்து ஒழுங்கமைத்தனர்.

நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர், யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள், யாழ்ப்பாண மாநகர முதன்மைப் பொறியியலாளர், யாழ்ப்பாணம் மாநகரசபையின் மூத்த அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஜ-105)

## கலை இலக்கியப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,மே 13

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் "பிரதேச, மாவட்ட, தேசிய கலை இலக்கியப் போட்டித் தொடர் 2019/2020" ற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் தென்மராட்சி பிரதேசத்துக்குட்பட்ட விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்த விண்ணப்பத்தையும், ஆக்கங்க்ளையும் பிரதேச செயலகத்தில் சமர்பிக்கவும். மேலதிக விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவங்களை தென்மராட்சி பிரதேச செயலகக் கலாசாரக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம் என உதவிப் பிரதேச செயலர் செல்வி க.வினோஜிதா அறிவித்துள்ளார். (ஜ)

## கசிப்பு வைத்திருந்தோருக்கு 250 மணித்தியால சமூகப்பணி

*சாவகச்சேரி மன்று உத்தரவு*

சாவகச்சேரி, மே 13

கசிப்பு வைத்திருந்த இருவருக்கு தலா 250 மணித்தியாலங்கள் சமூகப் பணி செய்ய வேண்டும் என்று சாவகச்சேரி நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது.

சாவகச்சேரி, மட்டுவில் பகுதியில் 600 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு நபர் ஒருவரை சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் கைது செய்திருந்தனர். அதேவேளை கெருடாவில் பகுதியிலும் ஒருவர் 110 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் மதுவரித் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இருவரும் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இருவருக்கும் தலா 250 மணித்தியாலங்கள் சமூகப் பணி செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்.

போதைப் பொருளை ஒழிக்க, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சிறப்பு வேலைத் திட்டங்களை நாட்டில் கொண்டு வந்தார்.

எனினும் கஞ்சா,ஹெரோயின், பீடிஇலைகள்போன்ற போதைப் பொருள்கள் வேறு நாடுகளில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்படுகின்றன. அந்த நடவடிக்கைகள் பலவற்றைக் கடற்படையினர் முறியடித்திருந்தனர். பலர் கைது செய்யப்பட்டிருந்தனர். மதுபானம், கஞ்சா போன்ற நாட்டுக்குள்ளேயே விற்பனை செய்யப்படுகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள், அரசியல் வாதிகள், மக்கள் எனப் பலரும் கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

எனினும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்களில் அதிகமாகவே கசிப்புக் காய்ச்சப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் மீதும் மக்கள் அதிருப்தி கொண்டிருந்தனர்.

பொலிஸாருக்குத் தெரியாது கசிப்பு காய்ச்சவோ, விற்கவோ முடியாது. அவர்களுடைய ஆதரவுடனேயே சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று பலரும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் மதுவரித் திணைக்களம் இதைக் கட்டுப்படுத்துவதில் தீவிரமாக இறங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கசிப்புக் காய்ச்சுபவர்களும், அதை வைத்திருப்புவர்களும், கைது செய்யப்பட்டு நீதிவான் மன்றில் முற்படுத்தப்படும் போது அவர்களுக்கு மன்று அதிக பட்ச தண்டனைகள் வழங்குகின்றது. இது அலுவலர்கள் தங்களது கடமையை செவ்வனே செய்ய தூண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-21)

## பெருந்திருவிழா

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா கடந்த வியாழக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 16 ஆம் திகதி மாலை 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும், மறுநாள் முற்பகல் 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 18 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்ததிருவிழாவும் இடம்பெறவுள்ளன என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஜ)

## கற்றல் செயற்பாடு 15 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 13

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் க.பொ.த உயர்தரம் 2021 ஆம் ஆண்டு கணித, உயிரியல் பிரிவு மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடு எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக பாடசாலை அதிபர் திருமதி எம்.விமலநாதன் அறிவித்துள்ளார். (ஜ)



யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் (அம்மன்) ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 நாள்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 18 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் ,19ஆம் திகதி தீர்த்த திருவிழா இடம்பெறும்.

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைப்பு

வவுனியா, மே 13

வவுனியா திருநாவற்குளம் விளையாட்டுக் கழகத்துக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தானால் ஒருதொகுதி விளையாட்டு உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (ம-110)

## இடம்பெயர்ந்த வலி.வடக்கு மக்கள் தற்போதைய பிரிவில் பதிவிடவும்

*பழைய பதிவு ஏற்றுக் கொள்ளப்படாதென மாவட்டச் செயலர் அறிவுறுத்துகிறார்*

யாழ்ப்பாணம், மே 13

வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் குடியமர்ந்துள்ள மக்கள் மட்டுமே அந்தப் பகுதிக்குரிய பதிவுகளைப் பேண முடியும். அவ்வாறின்றி, வலி. வடக்கு மக்கள் வேறிடங்களில் வசிப்பார்களாயின், வலி.வடக்குப் பதிவைப் பேணமுடியாது. அவர்கள் வசிக்கும் இடத்தின் பதிவையே பேணவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வலி.வடக்குக் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள், தமது சொந்தப் பதிவை நீக்கிவிட்டு தற்போது வசிக்கும் கிராமங்களில் நிரந்தர வதிவிட அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறு கிராம அலுவலர்கள் நிர்ப்பந்திக்கின்றனர் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

"நாங்கள் தற்போது உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தங்கியிருக்கிறோம். நாம் வருடந்தோறும் மாறும் வீடுகளுக்கு வருடந்தோறும் பதிவுகளை மேற்கொள்ள முடியாத நிலையிலும் எமது சொந்தப் பகுதியில் மீள்குடியேறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் வகையிலும் எமது பதிவுகளை இத்தனை ஆண்டுகளாக வலி. வடக்கிலேயே பேணி வருகின்றோம்.

தற்போது நாம் எந்தத் தேவைக்காக வலி. வடக்கில் உள்ள கிராம அலுவலர்களிடம் சென்றாலும் துருவித் துருவி விசாரணை நடத்துகின்றனர். பிற பகுதிகளில் தற்காலிக அடிப்படையில் வசித்து நிரந்தரக் கிராமத்தில் பதிவு உள்ளது என்றுகூறும்போது உடனடியாகவே எமது பதிவு அட்டைகளில் பேனாவால் கீறி பெயர்களை நீக்குகின்றனர்" என்று தெரிவிக்கின்ற னர்.

"தற்போது நாட்டில் நிலவும் அவசர கால சட்ட விதிகளின் கீழ் மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கைகளின்போது வதியும் கிராமஅலுவலர்களே உறுதிப்படுத்த வேண்டும். தவறினால் கைது செய்யப்படக்கூடும் என்பதே முக்கிய பிரச்சினை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் எமது சொந்தக் கிராமத்தின் பதிவை நாம் இழந்து நிற்கின்றோம்" என்றும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் மாவட்டச் செயலரிடம் கேட்டபோதே தற்போது வசிப்பிட பதிவுதான் வேண்டும் என்று கூறினார்.

"வலி.வடக்கில் பதிவுகளை மேற்கொண்டு பிற இடங்களில் வசிக்கும் அத்தனை பேரின் பதிவுகளும் நீக்கப்படும். வலி. வடக்கை நிரந்தரமாகக் கொண்டுள்ள எவரும் சொந்த இடம் திரும்பவோ அல்லது வீட்டுத் திட்டங்களைப் பெறுவதற்கோ இவை தடையாக அமையாது" என்றும் தெரிவித்தார். (த-105)

### கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில்

# ஆணையாளரின் திடீர் சந்திப்பு தமக்குச் சந்தேகமாகவுள்ளது

*உள்ளூர் மீனவ சங்கங்கள் தெரிவிப்பு*

*யாழ்ப்பாணம், மே 13*

*யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரையோரப் பகுதியில் கடலட்டைப் பண்ணைகள் அமைக்கும் நோக்கில், முதலீட்டுப் பண்ணையாளர்களைக் கடற்றொழில் நீரியல் வளத்துறைப் பணிப்பாளர் நாயகம் சந்தித்துக் கலந்துரையாடியமை தமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக கடற்றொழிலாளர் சங்கங்கள் தெரிவிக்கின்றன.*

உள்ளூர் மீனவர்கள் தெரிவித்த கடும் எதிர்ப்பின் காரணமாகவே யாழ்ப்பாணக் கடலில் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதி வழங்குவது முன்னர் கைவிடப்பட்டது.

இந்த நிலையில், குடாநாட்டின் கரையோரப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் பண்ணை அமைத்து தொழில் மேற்கொள்வதற்கான அனுமதி மற்றும் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் மாவட்ட நீரியல்வளத் துறைத் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் சந்திப்பு நடத்தினர்.

"மீனவ சங்கங்களின் உறுப்பினர்களான எமக்கு, இந்தச் சந்திப்புத் தொடர்பில் எந்தத் தகவலும் தெரியப் படுத்தப் படவில்லை. சந்திப்புக்களில் 25க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டுள்ளனர் என்று அறிந்தோம். யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஐவர் மட்டுமே அதில் பங்கு கொண்டுள்ளனர். இவர்களுக்குப் பண்ணைக்கான அனுமதி உடன் வழங்கப்படவுள்ளதோடு தீவகம் மற்றும் சேந்தாங்குளம் பகுதியில் 4 ஆயிரம் ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட இடங்களில் உள்ளூர் மீனவர்களின் பயன்பாட்டு நிலங்கள் பலவுள்ளன. உள்ளூர் மீனவர்கள் கண்டிப்பாகப் பாதிக்கப்படுவார்கள். முதலீட்டாளர்களை ஊக்குவித்து அவர்கள் இந்தத் தொழிலை மேற்கொள்வதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. மாறாக வெளிமாவட்டத்தவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அதனால் ஏற்படும் எதிர்கால விளைவுகளுக்கு குறித்த திணைக்களமே பொறுப்பேற்க வேண்டும்" என்று தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "மாவட்டப் பாகுபாடு இன்றி அனைவரிடமும் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் குறித்த தொழிலை மேற்கொள்ள ஆர்வம் செலுத்தவில்லை. அதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கி அதன் பின்பு ஏனையோருக்கும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதேநேரம் குறித்த இடங்களை நெக்டா நிறுவனமே தேர்வு செய்தது" என்று தெரிவித்தனர்.

இது குறித்து நெக்டா நிறுவனத்திடம் கேட்டபோது , "குறித்த பண்ணைக்கு உகந்த இடங்களைத் தெரிவுசெய்து அடையாளமிட்டு வழங்கினோம். அத்தனை இடங்களும் வழங்க வேண்டும் என்ற கடப்பாடு கிடையாது. உள்ளூர் மீனவர் தொழில் புரியும் இடத்தைத் தவிர்த்து ஏனைய இடங்களை வழங்க முடியும்" என்று தெரிவிக்கின்றனர். (த-105)



## ராகவன் – விக்கி பேச்சு

யாழ்ப்பாணம்,மே 13

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்குமிடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. கடந்த 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களுக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அண்மையில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் விடுதலை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. விக்னேஸ்வரனுடன் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் கலந்துகொண்டிருந்தார். (த-7)

## சங்கிலிய மன்னனின் நினைவுதின கலந்துரையாடல்

கொடிகாமம், மே 13

சங்கிலிய மன்னனின் 400 ஆவது நினைவு தின ஒழுங்கமைப்பு தொடர்பான இரண்டாவது கலந்துரையாடல் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கண்டி வீதி, கைதடி சிறி கற்பகவிநாயகர் கோவிலில் இது இடம்பெறவுள்ளது. சங்கிலியன் நினைவு தினக் குழு உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து மாவட்ட இணைப்பாளர்கள், அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சங்கிலியன் நினைவு தினக்குழு சார்பாக ஒவ்வொரு மாவட்டத்துக்குமான பொறுப்பாளர்கள் தெரிவுசெய்யப்பட வுள்ளனர்.

எனவே அனைத்து மாவட்ட ஆர்வலர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (த-159)

## தொழிற் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், மே 13

வடக்கு மாகாண தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி நெறியை முழுமைப்படுத்தியவர்களுக்குச் 'சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன.

உடுவில் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் கடந்த ஒரு மாதமாக இந்தப் பயிற்சி நெறி நடைபெற்றது. சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் நடைபெற்றது.

உடுவில் பிரதேச செயலர் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார். தொழிற்றுறைத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உடுவில் பிரதேச செயலக அதிகாரிகள், கலாசார அலுவலர்களும் கலந்து கொண்டிருந்தனர். தேங்காய் சிரட்டையைப் பயன்படுத்தி புதிய கைத்தொழில் பொருள்களை உருவாக்குவது தொடர்பிலான பயிற்சி நெறியே வழங்கப்பட்டது.

தேங்காய்ச் சிரட்டையைப் பயன்படுத்தி செய்யப்பட்ட கைத்தொழில் பொருள்கள் சான்றிதழ் வழங்கலின் போது காட்சிப்படுத்தப்பட்டன.

இவ்வாறான கைத்தொழில் பயிற்சிகள் மிகப் பயனுள்ளதாக அமைந்தன என்று தெரிவித்த சான்றிதழ் பெற்றவர்கள், குறித்த பொருள்களை உற்பத்தி செய்கின்ற போது அதற்கான சந்தை வாய்ப்புக்களையும் சம்மந்தப்பட்ட தரப்பினர்கள் ஏற்படுத்திக் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். (த-ரி1)





## 24 குடும்பங்களுக்கு கைதடியில் இலவச மின்

கொடிகாமம், மே 13

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பிரிவில் வறுமை நிலையில் வாழும் 14 குடும்பங்களுக்கு இலவசமாக மின்வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் வறிய குடும்பங்களிற்கு இலவசமாக மின்வசதி ஏற்படுத்தி கொடுக்க கிராம எழுச்சித் திட்டத்தில் நிதி ஒதுக்கியிருந்தார்.

கைதடி பிரதேசத்தில் 7ஆம் வட்டாரத்தில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சு.கேதீஸ்வரனின் சிபார்சில் ஜே/289 கைதடி கிழக்கு பகுதியில் 10 குடும்பங்களிற்கும் ஜே/290 கைதடி மத்தியில் 2 குடும்பங்களிற்கும் ஜே/291 கைதடி தெற்கு ஜே/293 கைதடி மேற்கு ஆகிய பகுதிகளில் தலா ஒவ்வொரு குடும்பங்களிற்குமாக 14 குடும்பங்களுக்கே அவ்வாறு இலவச மின்வசதி வழங்கப்பட்டுள்ளது. (ம-159)

# இலங்கைச் சட்ட நடைமுறை இனப் பாகுபாடாக உள்ளதா?

*முன்னாள் எம்.பி. வினோ கேட்கிறார்*

வவுனியா, மே 13
தமிழர்களின் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு அளித்தமைக்காக தமிழ்த் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். எனினும் தற்போதைய இஸ்லாமிய பயங்கரவாதத்தின்போது முஸ்லிம் தலைவர்கள் விசாரிக்கப்படக்கூட இல்லையே!

இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களில் கொல்லப்பட்டவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு விடுதலை அமைப்புகளின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரட்ன நேற்றுமுன்தினம் தனது பேச்சில், விடுதலைப் புலிகளின் போராட்ட காலத்தில் தமிழ்த் தலைவர்கள் அந்த போராட்டத்துக்கு ஆதரவளித்தது போல் முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் இஸ்லாமிய பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்க கூடாது என்று பேசியிருக்கின்றார்.

எங்களுடைய போராட்டம் உரிமைக்கான போராட்டம். அண்மையில்நடந்தபோராட்டம் இஸ்லாமிய அடிப்படைவாதத்துடன் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் கூட அது பயங்கரவாதம்.

இந்தச் சந்தர்ப்பத்திலே இவ்வாறான அரசியல்வாதிகளின் கொச்சைத்தனமான பேச்சுக்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

குண்டுத் தாக்குதல்கள் பற்றி நாடாளுமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்த் தலைவர்கள், அமைச்சர்கள், முஸ்லிம் அரசியல் தலைவர்கள், ஆளுநர்கள் மீது விரல் நீட்டப்படுகின்றது. அவர்கள் குற்றமிழைத்தார்களா, ஆதரவு வழங்கினார்களா என்பது பற்றி விசாரணை செய்யவேண்டும் என்ற கோரிக்கைகள் பல்வேறு தரப்பில் இருந்தும் வந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் அவர்கள் இதுவரை விசாரிக்கப்படவோ, கைது செய்யப்படவோ இல்லை. குறைந்தபட்சம் அவர்களிடம் பொலிஸ் விசாரணைகூட இதுவரைக்கும் மேற்கொள்ளப்படவில்லை.

நாடாளுமன்றின் எங்களுடைய உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள் எமது போராட்டத்துக்கு ஆதரவளித்தார்கள்என்றகுற்றத்துக்காக அரச பயங்கரவாதத்தால் படுகொலை செய்யப்பட்டார்கள் - என்றார். (த-110)

## பாகிஸ்தான் ஏதிலிகளை வன்னியில் அமர்த்தாதீர்

*காரணங்களையும் கூறுகிறார் முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா*

யாழ்ப்பாணம், மே 13
பாகிஸ்தானிலிருந்துவந்து ஏதிலிகளாக தஞ்சம் கோரியிருப்பவர்கள் நாட்டின் தென்மாகாணங்களிலும் கிழக்கு மாகாணத்திலும் குடியமர்த்தப்படாமல் வடக்கு மாகாணத்தில் குடியமர்த்த முற்படுவது திட்டமிட்ட சதி. இதனை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதிஅமைச்சருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

அவரது செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாகிஸ்தானிலிருந்துவந்திருக்கும் ஏதிலிகள் சம்பந்தமாக பலவித விமர்சனங்கள் எழுந்துள்ளன. குறித்த ஏதிலிகள் அவர்களது நாட்டில் சட்டவிரோதமாகச் செயற்பட்டவர்கள் என்ற தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று பொலிஸ் பேச்சாளரே தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமின்றி ஓரினச் சேர்க்கையாளர்களாக உள்ளனர் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ள நிலையில் இப்படியானவர்களை வவுனியாவில் குடியமர்த்த முற்படுவது எந்தவிதத்திலும் நியாயமற்றது.

ஏற்கெனவே வன்னி மாவட்டத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளால் அத்துமீறிய முஸ்லிம் குடியேற்றங்கள் இடம்பெற்றுவருகின்றன. இந்தச் சூழ்நிலையில் பாகிஸ்தான் ஏதிலிகளையும் இங்கே குடியமர்த்துவதனூடாக வன்னி மண்ணுக்குச் சொந்தக்காரர்களான தமிழ் மக்களின் பெரும் எதிர்ப்பைச் சந்திக்கவேண்டிவரும்.

குண்டுவெடிப்பின் ஊடாக நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலைமையின் கீழ் இவ்வாறான குடியேற்றத் திட்டங்கள் நிலைமையை மேலும் மோசமடையவேசெய்யும். மேல்மாகாணத்தில் இவர்களைக் குடியேற்றமுயற்சித்தபொழுது அங்கிருந்த பெரும்பான்மைச் சிங்களவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் செறிந்துவாழ்கின்றனர். அவர்கள்கூட ஏதிலிகளின் குடியேற்றத்தை விரும்பவில்லை.

இறுதியில் தமிழ் அரசியல்வாதி ஒருவரின் சம்மதத்துடன் இந்த முயற்சி எடுக்கப்பட்டிருப்பது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. வன்னி மாவட்டங்களில் ஏதிலிகள்போல் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கான குடியமர்வுகள் இன்னும் முழுமைப்படுத்தப்படவில்லையே! என்றுள்ளது. (த)

## ஆவணங்களுடன் நபரொருவர் மன்னாரில் கைது

மன்னார், மே 13
மன்னாரில்குண்டுத்தாக்குதல் தொடர்பான காணொலி மற்றும் ஒளிப்படங்களை மடிகணினியில் வைத்திருந்தார்என்றகுற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளோம் என்றும் இஸ்லாம் தொடர்பில் தமிழில் எழுதப்பட்ட புத்தகங்களையும்அவரிடம்மீட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

முருங்கன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட றசூல் புதுவெளி என்னும் முஸ்லிம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் காலை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இஸ்லாமியர்களின் வீடுகளில் தீவிர தேடுதல் நடத்தினர். இதன்போது சந்தேகத்துக்கிடமான ஒரு வீட்டைச் சோதனை மேற் கொண்டபோது இறுவெட்டுக்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட றசூல் புது வெளியை நிரந்தர முகவரியாக கொண்டவர். விசாரணை தொடர்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-213)

## தேர்தல்களில் வெல்ல முடியாதவர்கள் வங்குரோத்து அரசியல் செய்கின்றனர்

*காதர் மஸ்தான் எம்.பி குற்றச்சாட்டு*

வவுனியா,மே 13
மாகாணசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் வெல்ல முடியாத வர்கள் தற்போதைய சூழலை வைத்து வங்குரோத்து அரசியல் செய்யும் நிலையில் உள்ளனர் என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. கே. மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியாதிருநாவற்குளத்தில் விளையாட்டுக்கழகத்துக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் நடந்த மிலேச்சத்தனமான தாக்குதல் இந்த தாக்குதலாகத்தான் இருக்கும். இதற்கு இஸ்லாமிய பயங்கரவாதம்என்கின்றனர். ஆனால் அனைத்து இஸ்லாமியர்களையும்அவ்வாறுஎண்ண வேண்டாம். அனைத்து சமூகத்திலும் தீவிர போக்குடையவர்கள் இருக்கின்றார்கள். குறிப்பிட்ட சிலரே இவற்றைச்செய்துள்ளனர் என்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளேன்.

இவ்வாறான தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும். அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் கொடுக்காமல் அரசு எடுக்கும் செயற்பாடுகளை நாங்கள் பாராட்டுகின்றோம். அரசு முன்னமே சில நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். இரண்டு வருடங்களுக்கு முன்பே இவ்வாறு கடும்போக்குடன் சிலர் பேசுகின்றனர். ஆனால் அந்த நேரம் அரசு சிந்திக்கவில்லை. ஏனெனில் முஸ்லிம்களில் இவ்வாறு உருவாக மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருந்தது. சில இடங்களில் நாங்கள் கூட சொன்னோம், இவ்வாறான நிலை வராது என்று. எல்லோருடைய நம்பிக்கைக்கும் மண் அள்ளி போட்டது போலவே இந்தச் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

வவுனியாவில் பத்திரிகையாளர் மாநாடொன்றில் நான் தெரிவித்த கருத்தை வவுனியாவை சேர்ந்தவர்கள் சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சியால் திரிவுபடுத்தி வெளியிட்டு வருகின்றனர்.

ஒரு கட்சியின் இளைஞரணியின் செயலர் நடத்தும் இணையத்தளம் ஒன்றில், பயங்கரவாதத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கவேண்டும் என்று நான் கூறினேன் என்று இணையத் தளத்தில் தெரிவித்துள்ளார். இத்தகைய செயற்பாடுகள் அரசியல் காழ்ப்புணர்ச்சியே. சென்ற முறை தேர்தலில் இனவாதத்தை கக்கினார்கள். அதிலும் அவர்களால் வெல்ல முடியவில்லை. இவ்வாறான நிலையில் இதுவே சிறந்த சந்தர்ப்பம் என்று இருக்கின்றார்கள் - என்றார். (த-110)



## ‘சோலை மாதிரிக்கிராமம்’ கல்மடு நகரில் அடிக்கல்

கிளிநொச்சி, மே 13
போரில் உறவுகளை இழந்து செஞ்சோலையில் வளர்ந்து கல்வி கற்ற ஒரு தொகுதி பிள்ளைகளுக்கான மாதிரிக் கிராமம் கிளிநொச்சி கல்மடு நகரில் அமைக்கப்படவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அதற்கு நேற்றுமுன்தினம் அடிக்கல் நட்டார்.

அந்தக் கிராமத்துக்கு ‘சோலை மாதிரிக்கிராமம்’ என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

“போரால் அனைத்து உறவுகளையும் இழந்து நிர்க்கதிக்குள்ளானவர்கள் நாம். ஒரு வீட்டுப் பிள்ளைகளாக அருட்சகோதரியோடு வாழ்ந்தவர்கள். எதிர்காலத்திலும் அவ்வாறே அனைவரும் அருகருகே ஒன்றாக வாழ்வதற்கு உறவுப்பாலமாக இருந்து எமக்கு இந்த அரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்கு நன்றி கூறுகிறோம்” என்று அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர்.

நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர், வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர், கண்டாவளைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் ச. ஜீவராசா, அருட்சகோதரி, பிரதேச செயலக அலுவலர்கள், வீடமைப்பு அதிகார சபை அலுவலர்கள், கிராம மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (த-222)



## வவுனியாவில் கைக்குண்டு மீட்பு

வவுனியா, மே 13
வவுனியா மயிலங்குளம் பகுதியிலிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக மடுகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

மயிலங்குளம் பகுதியிலுள்ள வெற்றுக்காணி ஒன்றில் நேற்றுமுன்தினம் மாலை கைக்குண்டு காணப்படுவதாக விறகு வெட்டுவதற்குச் சென்ற சில நபர்கள் வழங்கிய தகவலையடுத்து மடுகந்தை பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது சிறப்பு அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்துக்குச் சென்ற படையினர் கைக்குண்டை மீட்டுள்ளதுடன் விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட கைக்குண்டாக அது இருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம)

# அரபு மொழிக்கும் இந்த நாட்டுக்கும் என்ன சம்பந்தம் உள்ளது கூறுங்கள்

## மாகாண முன்னாள் உறுப்பினர் கேட்கிறார்

வவுனியா, மே 13

இலங்கையில் மூன்றுமொழிகள் தான் அரசகரும மொழிகளாக காணப்படுகின்றன. ஆனால் அண்மைய நாள்களில் அரபு மொழியிலே பலகட்டடங்களின் பெயர்ப்பலகைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அரபு மொழிக்கும் இந்த நாட்டுக்கும் என்ன சம்பந்தம் உள்ளது?

இவ்வாறு வேள்வியெழுப்பும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன். அது பற்றி விசாரிக்க வேண்டும் என்று கூறுகிறார்.

கடந்த 21ஆம் திகதி குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி நிகழ்வு வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

1915 ஆம் ஆண்டில் சிங்கள மக்களால் முஸ்லிம்மக்கள் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

அன்றிலிருந்து போர்முடிவுற்ற 2009 அம் ஆண்டு வரையான 94 வருடகாலப் பகுதியில் சிறுபான்மை மக்கள் இந்தநாட்டிலே வாழ முடியுமா என்றகேள்வி இருந்து வந்தது.

1915 ஆம் ஆண்டு சிங்கள மக்களால் முஸ்லிம் மக்கள் தாக்கப்படும்போது அவர்களுக்கு ஆதரவாக தமிழ்த் தரப்புச் செயற்படவில்லை. அதுநாம்வெட்கப்படவேண்டியவிடயம். அன்றைய தமிழ்த் தலைவர்களான சேர்.பொன் இராமநாதன், அருணாச்சலம் ஆகியோர் லண்டனுக்குச் சென்று சிங்களத் தலைவர்களைக் காப்பாற்றும் பணி யை மேற்கொண்டார்கள். அதற்காக சிங்களமக்கள் அவர்களைக் கொண்டாடி நன்றி செலுத்தியிருந்த சம்பவங்களும் நடைபெற்றிருந்தன.

ஆனால் எங்களுக்கு ஒரு நிலைமை இப்படிவரும் என்பதை அன்று இருந்த தலைமைகள் சரியாகக் கணக்கிட்டிருந்தால் இன்றைய துர்ப்பாக்கியநிலை எமக்குவந்திருக்காது. தமிழ் அரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் காலப்பகுதிகளிலே முஸ்லிம் சகோதரர்கள் அரசியல்ரீதியாக எங்களோடு ஒன்றாக செயற்பட்டிருந்தார்கள். விடுதலை அமைப்புகளிலே ஒன்றாக இணைந்திருந்த சந்தர்ப்பங்களும் கூட உள்ளன.

இன்று இந்த அரசு ஒரு சில தலைமைகளின் சுயநலன்களுக்காக நாட்டையே குட்டிச்சுவராக்கிக்கொண்டிருக்கும் செயற்பாட்டை மேற்கொள்கிறது. எனவே இந்த அரசு, முப்படையினர், பொலிஸாரிடம் நான்கேட்க வேண்டிய விடயம் ஒன்று இருக்கிறது. போருக்குப் பிறகு இந்தநாட்டிலே திடீர் பணக்காரராக மாறியவர்களை பற்றி விசாரியுங்கள். அவர்களுக்கு இந்தப்பணம் எப்படி வந்தது என்று விசாரியுங்கள்.

தற்போதை நிலையில் ஒவ்வொரு இயக்கமும் தம்மைச் சுயவிமர்சனம் செய்து கொள்ளவேண்டும். போராட்டகாலங்களில் விரும்பியோ, விரும்பா மலோ பல தவறுகளை நாம் செய்திருக்கின்றோம். இனிவரும் காலங்களிலாவது நாம் ஒற்றுமையாகச் செயற்படுவதனூடாக எமது மக்களைக் காப்பாற்ற முடி யும்- என்றார். (த-110)

---

*கொக்கிளாய் சிங்களவர்களுக்கு*

## நில உரிமைச் சர்ச்சைகள் தீரும்வரை வீடுகளில்லை

*அமைச்சர் சஜித் கூறினாரென்று கூட்டமைப்பின் சாந்தி எம்.பி. தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 13

முல்லைத்தீவு கொக்கிளாயில், நில உரிமை தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வுகாணும் வரையில் தேசிய வீடமைப்பு அதிகார சபை வீடமைப்புத் திட்டம் வழங்காது.

இவ்வாறு அமைச்சர் சஜித் பிரேமதாச கூறியுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கொக்குளாய் மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள முகத்துவாரம் பகுதி தமிழர்களின் பூர்வீக உறுதிக் காணிகள். இதில் போரின் பின்னர் தமிழர்கள் மீளக்குடியமர அனுமதிக்க முன்பே சிங்களவர்கள் அரசு குடியேற்றி விட்டனர். அவ்வாறு 267 குடும்பங்கள் தமிழர்களின் நிலத்தில் அத்துமீறி வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலத்தில் வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

"இவை எமது உறுதிக்காணி என்பதால் நீதி கிடைக்கும் என்று நம்பினோம். தற்போது தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளது. இதற்காக அமைச்சர் சஜித் பிரேமதாச இங்கே வருகின்றார். இதனைத் தடுத்து எமது உறுதிக் காணிகளைப் பெற்றுத் தாருங்கள்" என்று அந்த நிலங்களுக்கு உரித்துடைய மக்கள் கோரி வருகின்றனர். இது தொடர்பில் அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்குத் தெளிவுபடுத்தினேன். இதனையடுத்து தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளரை என்னுடன் உரையாட வைத்தார். இதன் பிரகாரம் "குறித்த விடயத்துக்குத் தீர்வு இல்லையேல் வீட்டுத் திட்டம் நிறுத்தப்படும்" என்று பணிப்பாளர் கூறினார் என்று சாந்தி மேலும் தெரிவித்தார். (த-105)

---

## உபஅஞ்சலகத்துக்கு அடிக்கல்

30 வருடங்களின் பின்னர் முகமாலைக் கிராமத்தின் உப அஞ்சல் அலுவலக கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் நிதியிலிருந்து 15 லட்சம் பெறுமதியில் உப அஞ்சல் அலுவலகம் புதிதாக அமைக்கப்படவுள்ளது. இந்த வருட இறுதிக்குள் புதிய கட்டடத்தில் பணிகள் இடம்பெறும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. (த- 6)

---

## மர்மப் பொருளை மீட்டதால் பாதுகாப்புத் தரப்புத் தேடுதல்

தலைமன்னார், மே 13

தலைமன்னாரில் மக்கள் வாழும் பகுதியில் மர்மப் பொருள் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டதைத் தொடர்ந்து அந்தக்கிராமம் பாதுகாப்புப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் சிலுவை நகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அந்தப் பொருள், கடலில் பயணிக்கும் கப்பல்களை அடையாளப்படுத்தித் தரும் தன்மையுடையது என்று பொலிஸ் தரப்புத் தெரிவித்தது.

தலைமன்னார் கடற்படையினர், பொலிஸார் அந்த இடத்துக்கு விரைந்து அந்தப் பொருளை மீட்டனர். அதனையடுத்தே அங்கு தேடுதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-60)

---



## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அமர்வில் முள்ளிவாய்க்கால் உறவுகளுக்கு அஞ்சலி

கிளிநொச்சி, மே 13

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் கடந்த வெள்ளிக்கிழமை அஞ்சலி செலுத்தப்பட்டது.

சபையின் மாதாந்த அமர்வு சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் சபை மண்டபத்தில் ஆரம்பமாகியது. இங்கு சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் வீரபாகு தேவர், இந்த மாதத்தில் எமது உறவுகள் கொத்துக்கொத்தாக அழித்தொழிக்கப்பட்டனர். அவர்களுக்கு அஞ்சலி மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். இதன் பின்னர் சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் மெழுகுவர்த்தி வழங்கப்பட்டது இதனைத் தொடர்ந்து தங்கள் கைகளில் மெழுகுவர்த்திகளை ஏந்தி உறவுகளை நினைவுகூர்ந்து அனைத்து உறுப்பினர்களுக்கும் அஞ்சலி செலுத்தினார்கள். (ம-6)

---

## கொல்லப்பட்டவர்களுக்கு 21ஆம் நாள் நினைவேந்தல்

வவுனியா, மே 13


கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் கடந்த 21 ஆம் திகதிய ன்று படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு, ஒன்றிணைந்த விடுதலை அமைப்புக்கள் 21 ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வை வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடத்தின.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், தமிழீழவிடுதலைஇயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, ஈழப்புரட்சிஅமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நிகழ்வு நடைபெற்றிருந்தது.

முற்பகல் 10.30 அளவில் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற இந்தநிகழ்வில் ஆத்மசாந்தி தீபம் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு மூன்று நிமிடங்கள் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராத லிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான செ.மயூரன், ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, ஜனநாயக போராளிகள் கட்சியின் க.துளசி, ஈழப்புரட்சிஅமைப்பின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர். (த-110)

---



## வவுனியாவில் காட்டுத் தீ

வவுனியா, மே 13

வவுனியா பாறைக்கல்வெட்டு பகுதி காட்டில் நேற்றுமுன்தினம் தீ பரவியது. எனினும் வீடுகளுக்கு பரவ விடாமல் விரைந்து செயற்பட்ட நகரசபை தீயணைப்புபிரிவு தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தது.

வவுனியா, குடாகச்சகொடி, பாறைக்கல்வெட்டு பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் தீ பரவியுள்ளது. இதனையடுத்து விரைந்து செயற்பட்ட வவுனியா தீயணைப்பு பிரிவினர் மக்கள் குடிமனைக்குள் தீ பரவலடையாது தடுத்ததுடன், காட்டுக்குள் ஏற்பட்ட தீ பரம்பலையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர். எனினும் இந்தத் தீ விபத்து காரணமாக சுமார் 5 ஏக்கர் காட்டுப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளது. (ம-110)

---

## தகரக் கொட்டகைப் பொருள்கள் கையளிப்பு

கிளிநொச்சி, மே 13

இயக்கச்சி கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு தகர கொட்டகை அமைப்பதற்கான பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் குறித்த பொருள்கள் வழங்கப்பட்டன.

கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் தொடர்ச்சியான வேண்டுகோளின் அடிப்படையில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேனால் அமைப்பிடம் பொருள்கள் கையளிக்கப்பட்டன.

உபதவிசாளர் கஜன், உறுப்பினர்களான ரமேஷ் வீரபாகுத்தேவர், பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் மாலதி மகேந்திரம் பொது அமைப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஜ-6)



### சோதனைக்கு ஒத்துழைக்காத

# அபாயா அணிந்த ஆசிரியர்கள் விடயத்தை திரிவுபடுத்திவிட்டனர்

## மனோகணேசன் சாட்டை

கொழும்பு, மே 13

அபாயா அணிந்த ஆசிரியைகள் பெண் பொலிஸார் உடற்சோதனை செய்ய முற்பட்டபோது அதற்கு இடமளிக்கவில்லை. அவர்கள் இதனை மறைத்து விடயத்தை திரிவுபடுத்திவிட்டனர். புவக்பிட்டிய தமிழ்ப் பாடசாலையில் ஏற்பட்ட அமைதியின்மைக்கு இதுவே காரணம் என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மனோகணேசனால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அவிசாவளை புவக்பிட்டிய சிசிடிஎம் தமிழ் பாடசாலையில் பணியாற்றும் அபாயா அணிந்த ஆசிரியைகள், பாடசாலைக்கு உள்ளே செல்வதற்கு முன்னர், தம்மை பாதுகாப்பு தேவைப்பாட்டின் அடிப்படையில் உடற்பரிசோதனை செய்ய அங்கு வந்த பெண் பொலிஸாருக்கு இடம் கொடுக்கவில்லை. பொலிஸ் அறிக்கையிலும் இந்த விடயம் இடம்பெற்றுள்ளது. பாதுகாப்புச் சோதனைக்கு மறுப்புத் தெரிவிக்கும் எவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தமக்கு அதிகாரம் இருக்கின்றதாகவும், எனினும் பிரச்சினையை பெரிதுபடுத்த விரும்பாததால், ஆளுநர் அசாத் சாலியை சந்திக்க செல்ல அவர்களுக்கு தாம் இடம் கொடுத்ததாகவும் அவிசாவளை பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

'உடற்பரிசோதனை செய்ய அங்கு வந்த பெண் பொலிஸாருக்கு இடம் கொடுக்கப்படவில்லை' என்ற உண்மையை மறைத்து, புனைகதைகளை பரப்பி, அவிசாவளை புவக்பிட்டிய தமிழ் பாடசாலை விடயத்தை திரிக்க வேண்டாம் எனவும், சமூக ஊடகங்களை பயன்படுத்தி இனவாதத்தைக் கிளப்ப வேண்டாம் எனவும் அனைவரையும் கோருகிறேன்.



நாடாளுமன்ற நுழைவாயிலில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற ஊழியர்கள் என்ற பேதங்கள் இல்லாமல் அனைவரும் ஒவ்வொரு முறை உள்நுழையும்போதும் முழுமையான உடற்பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றோம். எமது வாகனங்கள் அனைத்தும் ஒவ்வொரு தரம் உள்நுழையும் போதும் முழுமையாக பரிசோதிக்கப்படுகின்றன. இதுபற்றி அனைவரும் அறிந்துக்கொள்ள வேண்டும். இதை அறியாதவர்களுக்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும். நாட்டின் பாதுகாப்பு பிரச்சினை தொடர்பில் விளையாட முடியாது.

முகத்தை மூடக்கூடாது என்பது மட்டுமே சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. உடை தொடர்பாக சட்டப்படி எவரையும் கட்டாயப்படுத்த முடியாது என்பதையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

பாடசாலை ஆசிரியர்களுக்கான பொதுவான உடை பற்றி இப்போது அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

இதுபற்றி செவ்வாய்கிழமை அமைச்சரவையில் உரையாட உள்ளேன். அபாயா அணிந்து வர வேண்டாம் எனக் கூற சட்டத்தில் இடமில்லை.

அனைத்து பாடசாலைகளின் ஆசிரியர்களும், தமது பாடசாலை வளாகத்துக்குள் நுழைவதற்கு முன்னர், தம்மை உடற்பரிசோதனை செய்ய உரிய பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளோருக்கு இடமளிக்க வேண்டும். இது இந்நாட்டில் இன்றைய பாதுகாப்பு நிலைமை சீராகும் வரை கட்டாயமாகும். இதில் எவருக்கும் எந்த ஒரு காரணம் கொண்டும் விலக்களிக்க முடியாது - என்றுள்ளது. (ஒ.5)

## தாக்குதல்களைத் தவிர்ப்பதற்கு புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் நட்பு நாடுகளிடையே அவசியம்

### மகிந்தவிடம் தெரிவித்தார் அமெ. தூதுவர்

கொழும்பு, மே 13

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் போன்ற தாக்குதல்களைத் தவிர்ப்பதற்கு நட்பு நாடுகளுக்கிடையே புலனாய்வுத் தகவல்கள் பரிமாற்றம் முக்கியமான காரணியாகும் என்று அமெரிக்கத் தூதுவர் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுடனான ஒருமைப்பாட்டையும், அனுதாபத்தையும் தெரிவிப்பதற்காக ராஜபக்சவை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் கடந்த வியாழக்கிழமை சந்தித்தார்.

இதன்போது கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல்களில் உயிரிழந்த அமெரிக்கக் குடிமக்களுக்காக தனது ஆழ்ந்த அனுதாபங்களை மகிந்த ராஜபக்ச அமெரிக்கத் தூதுவரிடம் வெளிப்படுத்தியதாகவும், பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் இலங்கைக்கு அமெரிக்க அரசின் முழுமையான ஆதரவை தூதுவர் தெரிவித்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9/11 தாக்குதல் அமெரிக்காவிற்கு பல பாடங்களைக் கற்றுத் தந்ததாகவும், அமெரிக்கப் புலனாய்வு சேவைகள் பலப்படுத்தப்பட்டதாகவும் தூதுவர் டெப்லிட்ஸ் எதிர்க்கட்சித் தலைவரிடம் கூறியதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ம-31)

## சட்டம், ஒழுங்கு அமைச்சை மட்டுமே ஏற்றுக்கொள்வேன்

### பொன்சேகா இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, மே 13

சட்டம், ஒழுங்கு அமைச்சு எனக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. பிறிதொரு அமைச்சு பதவியை வழங்கி தேசிய பாதுகாப்புச் சபையின் ஆலோசகராக்கும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

எனது நிலைப்பாட்டில் எவ்வித வேறுபாடுகளும் கிடையாது. வேறு எவ்வித அமைச்சுப் பொறுப்புக்களையும் பொறுப்பேற்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தீவிரவாதத் தாக்குதலை அரசு குறிப்பிடுவது போன்று குறுகிய காலத்துக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாது.

பாதுகாப்புத் துறைசார் விடயங்கள் அரசியல்வாதிகளுக்குத் தெரியாது. சிலர் பேச்சளவில் மாத்திரமே கருத்துரைக்கின்றார்கள். தேசிய பாதுகாப்புத் தொடர்பில் புரிந்து கொள்வதற்கும், செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் முறையான பின்புலம் அவசியம். போர்க்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்போது காணப்படுவது கிடையாது. பல விடயங்களில் தாமத நிலை காணப்படுகின்றது. இதற்கு பல்வேறு அரசியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவி எனக்கு கிடைக்குமா என்று உறுதியாகக் குறிப்பிட முடியாது. திறமைக்கு பொருந்தும் அமைச்சுக்களை வழங்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. பிறிதொரு அமைச்சுப் பதவியை வழங்கி தேசிய பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராக நியமிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனை ஒருபோதும் ஏற்க முடியாது. எனது நிலைப்பாட்டில் உறுதியாகவே உள்ளேன். எந்நிலையிலும் சட்டம் ஒழுங்கு அமைச்சினை தவிர்த்து பிறிதொரு அமைச்சினை ஒருபோதும் ஏற்கமாட்டேன் - என்றார். (ம-61)

## இலங்கைக்கு உதவ துருக்கி தயார்நிலை

### அதன் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 13

பன்னாட்டு ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்கும், பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு இலங்கை அரசுக்கு அனைத்து வழிகளிலும் உதவுவதற்கும் துருக்கி அரசு தயாராகவுள்ளதாக துருக்கியின் அயலுறவுத்துறை பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

துருக்கியின் வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் செடாட் ஒனால் கடந்த வெள்ளிக்கிழமை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்து நாட்டின் தற்போதைய நிலவரம் குறித்து கலந்துரையாடியிருந்தார்.

'இந்தச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது, பன்னாட்டு ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்கும், பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு இலங்கை அரசுக்கு அனைத்து வழிகளிலும் உதவுவதற்கு துருக்கி அரசு தயாராகவுள்ளதாக துருக்கி அரச தலைவர் ரயிப் எர்டோகன் தெரிவித்துள்ளதாக பிரதி அமைச்சர் ரணிலிடம் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான பொருளதாரம் புலனாய்வு மற்றும் இராணுவம் ஆகிய விடயங்கள் குறித்தும் துருக்கி இராஜாங்க அமைச்சர் தலைமை அமைச்சரின் கவனத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

துருக்கி மற்றும் இலங்கைக்கிடையிலான பாதுகாப்பு விடயங்கள், வர்த்தகம், முதலீடு மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களில் இருதரப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு விரைவாக வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு மத்தியில் சட்ட அமைப்பினை பலப்படுத்துவதும் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ம-61)

## எங்கள் குடும்பத்தை சல்லடைபோட்ட அரசு நாட்டின் பாதுகாப்பில் கோட்டைவிட்டுவிட்டது

### மகாநாயக்கர்களிடம் சுட்டிக்காட்டினார் மகிந்த

கொழும்பு, மே 13



எனது குடும்பம் என்ன செய்கின்றது என்பதை நோண்டிய அரசு, நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் கவனிக்காமல் விட்டுவிட்டது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கண்டிக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் மாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசியைப் பெற்றார்.

'நானும் எனது குடும்பமும் என்ன சாப்பிடுகிறோம், என்ன குடிக்கிறோம், என்ன செய்கிறோம் என்று தேடிய அரசு முக்கியமான விடயமான நாட்டின் தேசிய பாதுகாப்பை தேடிப்பார்க்க தவறி விட்டது. அமைதியான நாட்டை நாங்கள் கையளித்தாலும் இப்போது மக்கள் வீதியில் இறங்கி நடந்து செல்லவே பயப்படும் நிலைமை உருவாகியுள்ளது' என்று மாநாயக்க தேரர்களிடம் முறைப்பாடு செய்துள்ளார் மகிந்த. (ஒ.5)


## ஈஸ்டர் தாக்குதல்களை தடுக்கத் தவறிய அரச அதிகாரிகளுக்கு கடும்நடவடிக்கை

### மைத்திரி இவ்வாறு தெரிவிப்பு

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்களை முன்கூட்டியே தடுக்கக்கூடிய வாய்ப்பிருந்தும் அதைச் செய்வதற்கு தவறிய அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதல்களுடன் தொடர்புடைய சம்பவங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு தன்னால் நியமிக்கப்பட்டிருந்த குழு ஏற்கெனவே இரு இடைக்கால அறிக்கைகளை தன்னிடம் கையளித்திருப்பதாகவும் மூன்றாவது அறிக்கை இந்தவாரம் கையளிக்கப்படும் என்றும் அம்பாறையில் கூறிய சிறிசேன, அந்த அறிக்கைகளின் அடிப்படையில் (குண்டுத்தாக்குதல்களை தடுக்கத்தவறியதாக குற்றஞ்சாட்டப்படுகின்ற) அதிகாரிகளுக்கு எதிராகசட்டநடவடிக்கைஎடுக்கப்படும்என்று குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தாக்குதல்களுக்காக தான் ஒருபோதும் பதவிவிலகப்போவதில்லை என்று தெரிவித்த அரச தலைவர், பயங்கரவாதம் தோற்கடிக்கப்படுவதை உறுதி செய்வதே தனது பொறுப்பு என்றும் '9/11 அமெரிக்காவில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. வேறு நாடுகளிலும் அவ்வாறு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதற்காக அந்த நாடுகளில் எல்லாம் மக்கள் அரச தலைவரைப் பதவிவிலகுமாறு கேட்கவில்லை என்றும் கூறினார். (ம-61)



## தற்கொலைக் குண்டுக்கான பொருள்கள் தமிழகத்திலிருந்து வந்திருக்கக் கூடும்

*ராணுவத் தளபதி கிளப்பும் சந்தேகம்*

கொழும்பு, மே 13

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு கட்டளை வழங்கி, கட்டுப்படுத்துவராக ஸஹ்ரானே செயற்பட்டுள்ளார். குண்டுகளுக்கு பெரும்பாலும் உள்ளூர் வெடிபொருள்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும் சில பொருள்கள், தென்னிந்தியாவில் இருந்து, குறிப்பாக தமிழ் நாட்டில் இருந்து கிடைத்திருக்கக் கூடும். இவ்வாறு இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார்.

ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்கள் இஸ்லாமிய அரசு தீவிரவாதிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தனர் என்று விசாரணையாளர்கள் கண்டறிந்துள்ளனர். அந்தத் தொடர்புகள் எந்தளவுக்கு ஆழமானது என்பதைக் கண்டறிவதில் அதிகாரிகள் இப்போது ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை விசாரணைகள் பல பகுதிகளுக்கு அப்பால் செல்லவில்லை. நாம் சூழ்நிலை பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. இது கட்டுப்படுத்தக் கூடியது. இதனை அடக்கி விட முடியும். இன்னொரு சுற்றுத் தாக்குதல்களை நடத்த விடாமல், வழமை நிலையை கொண்டு வர முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்த தாக்குதலில் வெளிநாட்டுத் தொடர்பு உள்ளது. எனவே நாங்கள் அந்த பாதையிலேயே பணியாற்றுகிறோம். நிச்சயமாக இதற்குப் பின்னார் ஐ.எஸ். தொடர்பு உள்ளது. அதற்காக ஐ.எஸ். அமைப்பு நேரடியாகத் தொடுத்த தாக்குதல் என்று அர்த்தம் கொள்ளக் கூடாது.

சதி, தாக்குதல் திட்டம், நிதியுதவிகள் மற்றும் வெடிபொருள்கள் தென்னிந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டனவா என்பது உள்ளிட்ட வெளிநாட்டுத் தொடர்புகள் குறித்து, விசாரணைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இராணுவத்தை மீண்டும் முகாம்களுக்குள் திருப்பி அழைத்துக் கொள்ளவே விரும்புகிறேன். எதிர்கால அச்சுறுத்தல்களை சமாளிக்க, தொலைத்தொடர்பு கருவிகள், கண்காணிப்பு கருவிகள் உள்ளிட்ட உயர்தர தொழில்நுட்பத்தை வழங்குவதற்கு இந்தியா, சீனா, அமெரிக்கா, இஸ்ரேல், ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன - என்றார். (ஒ.5)

# சுற்றுலாவிகளை வரவழைக்க பாதுகாப்புத் தரப்பு பரப்புரை

கொழும்பு, மே 13

**இலங்கைக்குப் பயணம் செய்வதை தவிர்க்குமாறு வெளிநாடுகளின் பயண எச்சரிக்கைகளை நீக்குவதற்காக, பாதுகாப்பு அதிகாரிகளைப் பயன்படுத்தி, அரசு கடுமையான பரப்புரைகளில் இறங்கியுள்ளது.**

ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல்களை அடுத்து, இலங்கைக்குப் பயணம் செய்வதை தவிர்க்குமாறு அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளால் 37 பயண எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. குண்டுவெடிப்புகளை அடுத்து இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் தொகை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. மீண்டும் சுற்றுலாத் துறையை தூக்கி நிறுத்துவதற்கு அரசு பெரும் பிரயத்தனம் எடுத்து வருகிறது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகளைச் சந்தித்து, பயண எச்சரிக்கைகளை நீக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார். அதற்குச் சரியான பதில் கிடைக்காத நிலையில், அரசு வெளிநாட்டு தூதுவர்க ளைத் திருப்திப்படுத்தும் முயற்சிகளில் இராணுவ அதிகாரிகளையும், பாதுகாப்பு அதிகாரிகளையும் களமிறக்கியுள்ளது.

வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்து, நாட்டின் பாதுகாப்பு நிலமைகளின் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று நம்ப வைக்கும் முயற்சிகளில் இராணுவ அதிகாரிகள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி, அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, கொழும்பில் உள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களின் பாதுகாப்பு ஆலோசகர்களைச் சந்தித்து நாட்டின் தற்போதைய நிலமைகள் குறித்து தெளிவுபடுத்தினார். ஒவ்வொரு நாட்டின் தூதரகத்துடனும் தனிப்பட்ட முறையிலும், இதுபோன்ற கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுற்றுலாத்துறைஅமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் இராணுவப் புலனாய்வு அதிகாரி உள்ளிட்டவர்கள் ஜேர்மனி தூதுவரைச் சந்தித்து பிந்திய பாதுகாப்பு நிலமைகள் தொடர்பாக விளக்கிக் கூறியுள்ளனர். இந்தச்சந்திப்பின்போது, இராணுவப் புலனாய்வு அதிகாரி, ஜேர்மனி தூதுவரிடம் அறிக்கையையும் சமர்ப்பித்துள்ளார்.

இதன்போது, தற்போது பாதுகாப்பு நிலமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை ஜேர்மனி தூதுவர் ஏற்றுக்கொண்டுள்ளார். எனினும் பயண எச்சரிக்கையை நீக்குவதற்கு சில படிமுறைகளைக் கடந்து செல்ல வேண்டியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவினர் பிரான்ஸ் தூதுவரையும் சந்தித்துள்ளனர். எதிர்கால பாதுகாப்புக்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அவரும் திருப்தி வெளியிட்டுள்ளார். எனினும் சில நாள்கள் காத்திருந்த பின்னரே, பயண எச்சரிக்கைகளில் திருத்தங்களைச் செய்ய முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். சீனத் தூதுவரையும் தாம் விரைவில் சந்திக்கவுள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (ஒ.5)

## பண்டாரநாயக்க வானூர்தி நிலையத்தில் உச்சக்கட்டமான பாதுகாப்பு ஏற்பாடுகள்!

*வானூர்தி சேவைகள் நிறுவனத்தின் தலைவர் தம்மிக்க ரணதுங்க இப்படித் தெரிவித்தார்*

கொழும்பு, மே 13

தொடர்குண்டுத் தாக்குதல்களை அடுத்து பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்துக்கு பயணங்களுக்காக வருகைதருகின்ற பயணிகள், வானூர்தி நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்கள், பயணிகளின் உறவினர்கள் உள்ளிட்டோருக்கு சிறப்புப் பாதுகாப்பு வசதிகள் உள்ளிட்ட பல்வேறு புதிய ஒழுங்கு விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று வானூர்தி சேவைகள் நிறுவனத்தின் தலைவர் தம்மிக்க ரணதுங்க தெரிவித்தார்.

எனினும் இந்த பாதுகாப்பு செயன்முறைகளின் காரணமாக வானூர்திப் போக்குவரத்தின் இயல்பு நிலையில் எவ்வித இடையூறும் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் பணிப்பாளர்சபை கூட்ட கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்புச் செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டுதாக்குதல்களின் பின்னரும் கூட நிர்ணயிக்கப்பட்டிருந்ததன் படி அனைத்து வானூ ர்திகளும் வானூ ர்தி நிலையத்தை வந்தடைந்ததுடன், வானூர்தி நிலையத்திலிருந்தும் வானூர்திகள் தமது பயணத்தை மேற்கொண்டிருந்தன. இனிவரும் காலங்களிலும் இந்த நிலையைத் தொடர்ந்து பேணுவதற்கு வானூர்தி நிலைய நிர்வாகத்தினர், ஊழியர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

இத்தகைய சம்பவமொன்று எதிர்பாராத வேளையில் இடம்பெறும் போது எமக்கு பல்வேறு தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பத்தில், வானூர்தி நிலையத்தை பயன்படுத்தும் பயணிகளின் சௌகரியம் தொடர்பில் நூறுசதவீதம் கவனம் செலுத்த முடியாத நிலையொன்று இடம்பெறுகின்றது. அந்த வேளையில் அனைவரும் புரிந்துணர்வுடனும் பொறுமையுடனும் செயற்படவேண்டும் எனக் கேட்டுகொள்கின்றோம் - என்றார். (ம)

*வாகனத்தை நிறுத்தாததை அடுத்து*

## கடற்படையின் சூட்டில் சாரதி உயிரிழந்தார்

கொழும்பு, மே 13

வத்தளை ஹீனுபிடிய பிரதேச வீதியினூடாகச் சென்ற வாகனமொன்றை சோதனையிடுவதற்காக நிறுத்துமாறு கடற்படையினர் விடுத்த கட்டளையை ஏற்காது, வாகனத்தை நிறுத்தமறுத்தவாகனசாரதிமீதுமேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் குறித்த சாரதி உயிரிழந்துள்ளார். சனிக்கிழமை நள்ளிரவு 12 மணியளவிலேயே சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வத்தளை ஹீனுபிட்டிய வீதியில் அமைந்துள்ள கடற்படை சோதனை சாவடியைக் கடந்து சென்ற குறித்த வாகனத்தை நிறுத்துமாறு கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படை அதிகாரியொருவர் சைகை காண்பித்துள்ளார். எனினும் சாரதி வாகனத்தை நிறுத்தாது குறித்த அதிகாரி மீது மோதிவிட்டு தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார்.

இதன்போது வாகனத்தை நிறுத்துவதற்காக கடற்படையினரால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த வாகன சாரதி வத்தளை தனியார் மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள் ளார்.

எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நபர் வத்தளை பழைய நீர்கொழும்பு வீதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் என்று தெரியவந்துள்ளது. (மு-71)

# பிரிவெனா போன்று மத்ரஸாவும் கல்வி அமைச்சின் கீழ் வேண்டும்!

*ஹர்ஷ டி சில்வா வேண்டுகோள்*

கொழும்பு, மே 13

அடிப்படை வாதத்தால் பாதிக்கப்பட்டிருப்பது முஸ்லிம் சமூகமாகும். அதனால் அதனை முற்றாக ஒழிக்கும் பொறுப்பு முஸ்லிம் மக்களுக்கு இருக்கின்றது. அத்துடன் பிரிவெனா கல்வியைப்போன்று மத்ரஸா கல்வியையும் கல்வி அமைச்சுக்கு கீழ் கொண்டுவர வேண்டும் என அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.


நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கடந்த 21ஆம் திகதி பயங்கரவாத தாக்குதலையடுத்து சுற்றுலாத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அடிப்படைவாதம் எந்த இனத்தில் இருந்து வந்தாலும் அதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அடிப்படைவாதிகள் அனைத்து இனங்களிலும் இருக்கின்றனர். அவர்கள் தலைதூக்காத வகையில் சட்டதிட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும்முஸ்லிம்அடிப்படைவாதிகளின் தாக்குதலால் நாடு பெரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

அத்துடன்நாட்டின்சட்டம்அனைத்து மக்களுக்கும் ஒன்றாக இருக்க வேண்டும். தற்போது சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று முஸ்லிம் மக்கள் இந்த நாட்டில் ஆரம்பகாலம் முதல் ஏனைய இனத்தவர்களுடன், கலாசாரத்துடன் இணைந்து செயற்பட்டுள்ளனர். ஆனால் கடந்த 15 வருடங்களில் முஸ்லிம் கலாசாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வேறு நாடுகளின் கலாசாரம் எமக்குத் தேவையில்லை.

அத்துடன் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற தேடுதல் மூலம் வாள்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும் எமது சட்டத்தின் பிரகாரம் இவ்வாறான கூரிய ஆயுதங்களை வைத்திருந்து கைது செய்யப்பட்டால் அவருக்கு 50 ரூபாவுக்கு அதிகப்படாத தண்டப்பணமே அறவிடப்பட முடியும். இவ்வாறான சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ம)



# ஹொங்கொங் நாடாளுமன்றில் அடி தடி!

ஹொங்கொங், மே13

சீனாவின் சுயாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்நாடாளுமன்றில் குடியரசுக்கட்சிஉறுப்பினர்களுக்கும், சீனாவின்அதிகாரத்துக்குஆதரவாகஉள்ள உறுப்பினர்களுக்கும் இடையே நேற்றுஏற்பட்டவாக்குவாதம்கைகலப்பில் முடிந்தது. இதனால் உறுப்பினர் ஒருவர் காயமுற்று மருத்துவமனைக்குக்கொண்டுசெல்லப்பட்டார். இன்னும் ஓர்உறுப்பினரின்கைமுறிந்துள்ளது. அத்துடன்மேலும்பலர்காயங்களுக்கு உள்ளாகினர்.

சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் பொருளாதார மையம் சம்பந்தமான சட்டமூலம்மீதானவிவாதத்தின்போதே இந்தக் கைகலப்பு ஏற்பட்டது. இந்தச் சட்டமூலம் நிறைவேறினால் ஹொங்கொங்தனதுபொருளாதாரமையத்தில் உள்ளகட்டுப்பாட்டைஇழக்கும்நிலை உருவாகும். இதனால் இது சம்பந்தமானவிவாதத்தின்போதுஉறுப்பினர்கள் மேசைகளின் மீது ஏறி வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் கைகலப்பிலும் ஈடுபட்டனர்.

அத்தோடு குற்ற விசாரணைக்கு உள்படுத்தப்படுவோரை சீனாவுக்கு அனுப்பி விசாரணையை எதிர்கொள்ள வைக்கும் வகையில் இந்தச் சட்டத்திருத்தம் அமைந்தது என்பதாலும் ஹொங்காங் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கைகலப்பு நடந்தது என்று கூறப்படுகிறது.



# எல்லைகளை திறக்கிறது வெனிசுலா

கராகஸ், மே13

வெனிசுலாவில் நீடிக்கின்ற அரசியல் குழப்பங்கள் காரணமாக இந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் வெனிசுலா அரசு தனதுநாட்டுஎல்லைகளைமூடியிருந்தது. தற்போது வரை வெனிசுலாவின் அரசியல்குழப்பங்கள்முடிவுக்குவரவில்லை. ஆனாலும்தனதுநாட்டின்எல்லையைத் திறக்க முடிவுசெய்துள்ளதாகவெனிசுலாவின்உபஅதிபர்டெரெக்எல்அயிஸாமி அறிவித்தார்.

இதில்பிரேசில்எல்லைதிறக்கப்படவிருப்பதைச்சுட்டிக்காட்டினார். பிரேசில்தவிர்ந்த வெனிசுலாவின் மற்றைய அயல் நாடுகளின் எல்லைகள் அனைத்தும் மூடப்பட்டிந்தாலும் அவை குறித்து உப அதிபர் எதுவும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் 8 குழந்தைகள் சாவு

காபுல், மே13

ஆப்கானிஸ்தானின்கஸ்னிமாகாணத்தில்கண்ணிவெடியில்சிக்கிய 8 குழந்தைகள்உடல்சிதறிப்பரிதாபமாகச்சாவடைந்தனர். காயமடைந்த இரண்டுகுழந்தைகள்உயிருக்குஆபத்தானநிலையில்சிகிச்சைபெற்று வருகின்றனர். இந்தக்கண்ணிவெடிதலிபான்களால்புதைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கஸ்னி மாகாணத்துக்குட்பட்ட முக்கொர் என்கிற இடத்தில் இராணுவத்தினரைக்கொல்வதற்காகவீதியோரத்தில்தலிபான்ஆயுததாரிகள்புதைத்து வைத்திருந்த கண்ணிவெடியே இது என்று அறியப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின்வடபகுதியில்தலிபான்கள்மற்றும்பல்வேறுசிறிய ஆயுதக்குழுக்களின் ஆதிக்கம்சமீபகாலமாக அதிகரித்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலையடுத்துத் தலிபான்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அந்த நாட்டின் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு அந்த நாட்டுஅதிபர் அஷ்ரப்கானிஉத்தரவிட்டார். ஏலவே இந்தப்படைகளுக்கு உதவியாக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் தலிபான்கள்மற்றும்அங்குபரவியிருக்கின்றஆயுதக்குழுக்களைக்குறிவைத்து வான் தாக்குதல்களில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில்விடுதியில்தாக்குதல்

## ஒருவர் சாவு; ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர்

இஸ்லாமபாத், மே13

பாகிஸ்தானின்குவாதர்நகரிலுள்ளநட்சத்திர ஹோட்டலுக்குள் புகுந்து ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தினர். அந்தத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். ஹோட்டலுக்குள் புகுந்த ஆயுதாரிகளைத் தடுத்து நிறுத்திய காவலாளியே இவ்வாறு சுட்டுக் கொள்ளப்பட்டார்.

தாக்குதல் நடத்திய ஆயுததாரிகளைச் சுட்டுக் கொன்றுள்ளதாக அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் எல்லையையொட்டிஅமைந்துள்ளபாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணமாணத்திலுள்ள துறைமுகநகரான குவாதருக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதால் அவர்களைக் குறிவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. காவலாளியை ஆயுததாரிகள் சுட்டதும் ஹோட்டலில் தங்கியிருந்தவர்கள் மீது துப்பாக்கிச்சூடுநடத்த முயன்றனர்.



சமநேரத்தில்பொலிஸாருக்குத்தகவல் அனுப்பப்பட்டுவிட்டதால் சம்பவ இடத்துக்குவிரைந்தபொலிஸாரால்துப்பாக்கிதாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத்தாக்குதல் சம்பவத்தால் குவாதர் நகர் முழுதும் பரபரப்பு ஏற்பட்டது.



# இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் கருத்துக்களை மற்றவர் புரிந்து கொள்வதில் குழப்பம் ஏற்படலாம். குடும்ப விஷயங்களை பிறரிடம் பேச வேண்டாம். கூடுதல் முயற்சியினால் தொழில், வியாபார வளர்ச்சி சீராக இருக்கும்.

**இடபம்:** சில விஷயங்களில் அதிருப்தி இருக்கும். நம்பிக்கையுடன் செயல்படுவதால் தொழிலில் வளர்ச்சி ஏற்படும். .பணப்பரிவர்த்தனையில் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். குடும்பத்தில் ஒற்றுமை சீராக இருக்கும்.

**மிதுனம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்பட்டு, லாபம் அதிகரிக்கும். குடும்ப விவகாரத்தில் சுமூகத் தீர்வு கிடைக்கும்.

**கடகம்:** உங்களின் நல்ல குணங்களை சிலர் விமர்சித்து பேசுவர். பொறுமையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறை ஓரளவு சீராகும். முக்கியச் செலவுக்கு சேமிப்பு பணம் பயன்படும்.

**சிம்மம்:** புதியவரை நண்பராக ஏற்பதில், அதிக கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் வருகிற குறுக்கீடுகளை சரி செய்வதால், வளர்ச்சி சீராகும்.

**கன்னி:** மனதில் சிறு சஞ்சலம் வந்து விலகும். குடும்பத்தில் எவருடனும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** மிகுந்த புத்தி சாதுர்யத்துடன் செயல்படுவீர்கள். பணிகள் இலகுவாக நிறைவேறும். தொழில், வியாபாரம் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை அடையும். நண்பரிடம் கொடுத்த பணம் கிடைக்கும்.


**விருச்சிகம்:** சவால்களை ஏற்று செயல்பட எண்ணம் வளரும். தடைகளை தகர்த்தெறியும் விதமாக பணிபுரிவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும்.

**தனுசு:** கூடுதல் பணி உருவாகி தொந்தரவுதரலாம். சுயலாபத்துடன்சிலர் பழகுவர். தொழில், வியாபாரத்தில்சராசரி பணவரவு கிடைக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**மகரம்:** பேசும் வார்த்தை குளறுபடி ஏற்படலாம். பேச்சில், செயலில் நிதானத்தை கடைப்பிடியுங்கள். தொழில், வியாபாரத்தில் தென்படும் குறைகளை உடனடியாக சரிசெய்வது நல்லது.

**கும்பம்:** புதிய விஷயங்களை அறிவதில்ஆர்வம்கொள்வீர்கள். நண்பர்களின் உதவி மனதில்ஊக்கம்தரும். பணவரவு அதிகரிக்கும்.

**மீனம்:** உங்கள்பேச்சில்வசீகரத் தன்மை இருக்கும். சமூகத்தில் மதிப்பு, மரியாதை கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். ஆதாய பணவரவு உண்டு.



## அல்குர்ஆனை மேற்கோள்காட்டி கிழக்கில் படையினர் பரப்புரை

மட்டக்களப்பு, மே 13

'நீர் உண்மையாகவே இஸ்லாம் மதத்தைக் காப்பவரா?', 'நீங்களும் தூய இறைவனின் அடியாரா?' ஆகிய தலைப்புக்களில் அமைந்த இரு வகையான துண்டறிக்கைகளை பாதுகாப்புத் தரப்பினர் முஸ்லிம் மக்களிடத்தில் விநியோகித்து வருகின்றனர்.

முஸ்லிம் மக்களின் புனித அல்குர் ஆனில் உள்ள வசனங்களை மேற்கோள்காட்டி துண்டறிக்கை அச்சிடப்பட்டுள்ளது.

அதில் இலங்கை உங்களதும், எங்களதும் தாய்நாடாகும், அதைப் பாதுகாப்பது எம் அனைவரினதும் கடமை என்ற வாசகமும் அச்சிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்கள் மத்தியில் படையினர் இந்தத் துண்டறிக்கையை விநியோகித்து வருகின்றனர். (ஒ.5)

## முஸ்லிம்களுக்கு எதிராக தமிழரைத் தூண்டுகின்றது

### பெரும்பான்மை இனம் மீது

### சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொடிகாமம், மே 13

முன்னைய காலத்தில் முஸ்லிம் சமூகத்தை தமிழ் சமூகத்துக்கு எதிராகப் பிரித்துவைக்கப் பெரும்பான்மை இனம் முயற்சித்தது. இப்போது முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக தமிழ் சமூகத்தை எதிராக்க முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

துரித கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தென்மராட்சிப் பகுதியில் ஒதுக்கிய நிதிகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், பிரதேச சபைத் தவிசாளர் க .வாமதேவன் மற்றும் நகர சபை, பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கிராம மட்ட பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினரால் துரித கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 224 வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் 142 வீதிகளுக்கும் 15 ஆலய அபிவிருத்திக்கும் 21 பாடசாலைகளுக்கும் 35 மின்சாரத்துக்கும் 2 விவசாயக் குள சீரமைப்புக்கும் 170.66 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

துரித கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூன்றாவது 100 மில்லியன் நிதி நாட்டுச் சூழ்நிலை காரணமாக சிக்கலில் உள்ளது. எப்போதும் இல்லாததுபோன்று தற்போதைய சூழ்நிலை காணப்படுவது எரிச்சல் ஊட்டும் செயலாகத் தெரிகின்றது. இங்கு ஒன்றும் நடைபெறவில்லை, ஏன் இங்கு சோதனை செய்ய வேண்டும்? மக்கள் சொல்வது போல 4 வருடங்களாகப் பாதுகாப்பு தளர்த்தப்பட்டு ஒரு கேள்வியும் இல்லாமல் இருந்தோம். இராணுவம் இதை வைத்து தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக்கூடும். அங்குதானே குண்டு வெடித்தது இங்கு இல்லை தானே என்று சொல்ல முடியாது. ஒரு இடத்தில் வெடித்தால் திரும்பவும் அந்த இடத்தில் வெடிக்காது. எனவே கவனமாக இருக்க வேண்டும். நாட்டில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையை ஓரளவுக்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

தகவல் தெரிந்திருந்தும் பாதுகாப்புத் தரப்பு எந்த நடவடிக்கையையும் எடுக்காத காரணத்தால்தான் இப்படியான சம்பவம் நடந்துள்ளது . நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நச்சு வாயு அடிக்கப்போகிறார்கள் என்று சொன்னார். இது உண்மையா வதந்தி கிளப்பினாரா எனத் தெரியவில்லை - என்றார். (த-1591319)


### பல்கலைக்கழகச் சூழலில்

## மாணவர் விடுதலையை வலியுறுத்தி பதாகைகள்

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலர், சிற்றுண்டிச் சாலை ஊழியர் ஆகியோரது விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சூழலில் நேற்றுத் தொடக்கம் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த 3ஆம் திகதி இராணுவத்தினரால் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. மாணவர் ஒன்றிய அறையினுள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப்படம் காணப்பட்டதாகவும், சிற்றுண்டிச் சாலையில் தியாக தீபம் திலீபனின் ஒளிப்படம் காணப்பட்டதாகவும் தெரிவித்து இராணுவத்தினர் கைதுகளை மேற்கொண்டிருந்தனர். பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகாலச் சட்ட விதிகள் ஆகியவற்றின் கீழ் வழக்குகள்



தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவர்களின் விடுதலைக்காக பல்வேறு தரப்பினரும் முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர். இன்றைய தினம் இவர்களுக்கு பிணை வழங்கப்படலாம் என்று அரச தரப்பு வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தி பல்கலைக்கழகச் சூழலில் நேற்றைய தினம் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

'வீணே சிறையிருக்கும் எம் மாணவர்களையும் சிற்றுண்டிச்சாலை நடத்துனரையும் விடுதலை செய்து நாள்கள் விரயமாகாமல் கல்வி நடவடிக்கைகள் தொடங்க ஆவண செய்க!', 'விரைந்து சிறைக்கதவுகள் திறக்கட்டும்', 'வீணே மூடிக்கிடக்கும் எங்கள் பல்கலைக்கழகத்தின் கதவுகளும் திறக்கட்டும்', 'காக்கவென வந்த சட்டங்கள் அப்பாவிகளுக்கெதிரானது ஏன்?,', 'மாணவர்களின் கல்வி சிறையிலா???' என்ற வசனங்கள் அந்தப் பதாகைகளில் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மறுஅறிவித்தல் வரையில் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5.7)

## இலங்கையுடன் ராணுவ உறவுகளை அமெரிக்கா துண்டித்தமை தவறு

### கூறுகிறார் ரொபேட் ஓபிளேக்

கொழும்பு, மே 13

இலங்கையின் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு இலங்கையுடனான இராணுவ உறவுகளை ஒபாமா நிர்வாகம் துண்டித்துக் கொண்டது தவறாகும் என்று இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவரும், ஒபாமா நிர்வாகத்தில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்க செயலருமான ரொபேட் ஓபிளேக் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட தலைமையிலான 'பாத் பைண்டர்' பவுண்டேசன் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவத்தால் பெருமளவில் மனித உரிமைமீறல்கள் இழைக்கப்பட்டன என்ற முறைப்பாட்டை அடுத்தே இலங்கையுடனான உறவுகளை அமெரிக்கா துண்டித்துக்கொண்டது.

போரின் இறுதிக்கட்டங்களில், குறிப்பாக 2008 - 2009 பகுதியில் மனித உரிமைகள் பற்றிய அக்கறைகள் இலங்கை இராணுவத்துடனும், கடற்படையுடனுமான எமது இராணுவ ஒத்திகைகளை, பயிற்சிகளை, உதவிகளைப் பெரும்பாலும் முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்தியது. விடுதலைப் புலிகள் கப்பல் மூலமாக ஆயுதங்களைக் கொண்டு வருவதை முறியடிப்பதற்கு இலங்கைக்கு உதவுவது அமெரிக்காவின் நலன்களுக்குச் சாதகமானது என்று வாதிட்டு இலங்கைக் கடற்படைக்கும், எமது கடற்படைக்கும் இடையிலான ஒத்துழைப்பை கடுமையான முயற்சிகளின் விளைவாக ஒரு சிறிய அளவிலேனும் தொடர்ந்து பேணுவதற்கு என்னால் இயலுமாக இருந்தது. இன்று அந்தக் கட்டுப்பாடுகள் இல்லை என்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது - என்றார். (ஒ.5)

## தேர்தல்களை ஒத்திவைப்பது பயங்கரவாதத்துக்கு சமன்

### ஆணைக்குழு தலைவர் மகிந்த

கொழும்பு, மே 13

தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவது பயங்கரவாதத்துக்கு சமமான ஒரு செயலாகும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நிலவும் தற்போதைய நிலைமை காரணமாக தேர்தல்கள் ஒத்திவைக்கப்படக்கூடாது. பாதுகாப்பு நிலைமையை காரணம் காட்டி தேர்தலை பிற்போடுவதற்கான அவசியம் இல்லை. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட வேண்டியதே தற்போதைய காலகட்டத்தின் அடிப்படை செயற்பாடாகும். பாதுகாப்பான சூழ்நிலையை காரணம் காட்டி எந்தத் தரப்பினராவது தேர்தலை பிற்போட எதிர்பார்ப்பார்களாயின் அது பயங்கரவாதத்துக்குச் சமனான செயல் - என்றார். (ஒ.5)

### அதிநவீன...

கொண்டுவரப்பட்டன என்பது குறித்து தீவிர விசாரணைகள் நடக்கின்றன.

இலங்கைக் கடற்படையின் அதிவேகப் படகைவிட கூடுதல் வேகத்தில் இந்த நீர்மூழ்கி இயந்திரங்கள் செல்லும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அம்பாறையிலுள்ள கட்டடத்திலிருந்து இவை நேற்று மீட்கப்பட்டுள்ளன. (ஒ.5)

### கோத்தா...

அமைப்பினருக்கு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச தீனிபோட்டு வளர்த்துள்ளார் என்று அரச தரப்பால் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தநிலையில், அவர் அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்டு வென்றால் இந்நாட்டில் மீண்டும் குருதி ஆறு ஓடும். கடந்த ஆட்சியில் இடம்பெற்ற வெள்ளைவான் கடத்தல்கள், காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்கள் மற்றும் மனிதப் படுகொலைகள் மீண்டும் அரங்கேறும். இவ்வாறு தெரிவித்தார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க.

'இஸ்லாமிய தீவிரவாதிகளுக்குத் தீனிபோட்ட கோத்தபாய, அரச தலைவரானால் மீண்டும் அந்தத் தீவிரவாதிகளுக்குத் தீனிபோட்டே தீருவார். அந்தத் தீவிரவாதிகளை இல்லாதொழிப்பேன் என்று அவர் கூறுவது நகைப்புக்குரியது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரச தலைவர் தேர்தலில் தான் களமிறங்கி வென்றதும் இஸ்லாமியத் தீவிரவாதிகளைக் கூண்டோடு அழிப்பதே தனது முதல் இலக்கு என்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச பன்னாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

'ராஜபக்ச ஆட்சியில் மனிதப் படுகொலைகளைப் புரிந்த கோத்தபாய ராஜபக்சவை சிறையில் அடைக்காமல் வெளியில் உலாவ விட்டது ஐக்கிய தேசியக் கட்சி அரசும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் செய்த பாரிய தவறாகும்' எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ.5.22)

### தற்கொலைதாரிகள்...

யம் ஆகியவற்றில் உயிர்த்த ஞாயிறன்று தற்கொலைத் தாக்குதல்களை நடத்திய அலாவுதீன் மொஹம்மட் முவாம், அச்சு மொஹம்மது மொஹம்மது ஹஸ்தூன் ஆகியோரின் அடையாளம் மரபணுச் சோதனைகள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களது உறவினர்களிடம் இருந்து பெறப்பட்ட மரபணு மூலக் கூறுகளுடன், கொச்சிக்கடை தேவாலயத்தில் இருந்து பெறப்பட்ட குண்டுதாரியான அலாவுதீன் மொஹம்மட் முவாத்தின் தலைப்பகுதி மரபணு ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கட்டுவபிட்டி தேவாலயத்தில் இருந்து மீட்கப்பட்ட ஹஸ்தூனின் உறுப்புக்களில் இருந்து பெறப்பட்ட மரபணு மூலக் கூறுகள் அவரது சொந்தங்களின் மூலக்கூறுகளுடன் ஒப்பிட்டு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது.


ஏனைய 7 குண்டுதாரிகள் தொடர்பிலான மரபணு சோதனைகள் தொடர்ந்து இடம்பெறுவதாக அரச இரசாயன பகுப்பாய்வாளர் வெலி அங்க தெரிவித்தார். (ஒ.5)

# இளங்கதிர் கழகம் இலகுவான வெற்றி

யாழ்ப்பாணம், மே 13
வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் 5ஆவது ஆண்டாக நடத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளங்கதிர் அணி வெற்றிபெற்றது. தீருவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளங்கதிர் அணியை எதிர்த்து சைனிங்ஸ் அணி மோதியது.
2:0 என்ற கோல் கணக்கில் இளங்கதிர் அணி வெற்றிபெற்றது. இளங்கதிர் அணியின் சார்பில் பிரசாந், கபில் இருவரும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தனர். (ம-23)

# நியூபேட்ஸ் அணி வென்றது

யாழ்ப்பாணம், மே 13
குப்பிளான் ஞானகலா விளையாட்டுக் கழகம் நடத்தும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நியூபேட்ஸ் அணி வெற்றி பெற்றது. ஞானகலா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நியூ பேட்ஸ் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய நியூபேட்ஸ் அணி 3 இலக்குகளை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. கனிஸ்ரன் 60 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.
பதிலுக்குக் களமிறங்கிய ஞானமுருகன் அணி 60 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தொல்வியடைந்தது. (ம-23)



# நடால் வெளியேற்றம்

ஸ்பெய்னின் தலைநகர் மட்ரிட்டில் இடம்பெற்றுவரும் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிக்குத் தகுதிபெறாமல் அரையிறுதியுடன் வெளியேற்றப்பட்டார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் நடாலை எதிர்த்து கிரீஸைச் சேர்ந்த சிட்சிபாஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 6:4, 2:6, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் 2:1 என்ற செற் கணக்கில் சிட்சிபாஸ் வெற்றிபெற்று நடாலை வெளியேற்றினார்.
நடால் ஸ்பெய்னைச் சேர்ந்தவர். இதனால் சொந்த மண்ணில் அவர் கிண்ணம் வெல்லுவார் என்று பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. எனினும் அவர் அரையிறுதியுடன் வெளியேற்றப்பட்டார். (ம)



# மகாதீபம் கழகம் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், மே 13
கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட மூன்றாம் பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கு இடையிலான தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மகாதீபம் விளையாட்டுக் கழக அணி 179 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மகாதீபம் அணியை எதிர்த்து நியூஸ்ரார் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மகாதீபம் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 44 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றனர். கீர்த்திகன் 64 ஓட்டங்க்ளையும், நிரேசன் 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் கரிஸ் 4 இலக்கினையும், லக்;சன் 2 இலக்கினையும், கஜலக்சன் 3 இலக்கினையும் வீழ்த்தினர்.
341 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணியினர் 28 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 161 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். ரஜனிட்டன் 49 ஓட்டங்களைப் பெற்றமையே அதிகபட்சம். பந்துவீச்சில் பிரவிந்தன் 5 இலக்குகளையும், தனுசன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)


# சமநிலை

யாழ்ப்பாணம், மே 13
வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் 5ஆவது ஆண்டாக நடத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலையில் முடிந்தது.
தீருவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தீருவில் அணியை எதிர்த்து உதயசூரியன் ஏ அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவுசெய்தன. (ம-23)

# விளையாட்டுக் கழகங்களினது பிரதிநிதிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் சந்திப்பு

கரணவாய், மே 13
கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளை யாட்டுக்கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்து விளையாட்டு அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர ஈ.சரவணபவன்.
நாடாளுமன்ற உறுப்பினரின் வடமராட்சி இணைப்பாளர் எஸ்.தினேஸ் தலைமையில் நெல்லியடி உதயன் பணிமனையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கழகங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் தேவைகள் தொடர்பாக கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் முதற்கட்டமாக சகல கழகங்களுக்கும் 10 இலட்சம் ரூபா நிதியில் விளையாட்டு உபகரங்களை கொள்வனவு செய்து வழங்குவதாகவும் ஏனையவற்றை முன்னுரிமை அடிப்படையில் செய்து தருவதாகவும் உறுதியளித்தார்.
இந்தக் கலந்துரையாலில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த. ஐங்கரன், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் இளைஞர் கழகங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-108)








உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்பதற்காக இங்கிலாந்துக்குச் சென்றுள்ள இலங்கை அணி அங்கு தனது பயிற்சி முகாமை நேற்று ஆரம்பித்தது. (ம)

## மயிரிழையில் தோற்றது சென்னை

# நான்காவது தடவையாக மகுடம் சூடியது மும்பை







நான்காவது தடவையாக மும்பை இந்தியன்ஸ் ஐ.பி.எல். சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது. சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை ஓர் ஓட்டத்தால் வெற்றி கொண்டது மும்பை அணி. இறுதிப் பந்து வரையில் பரபரப்பாகச் சென்ற ஆட்டம் இறுதியில் மும்பையின் பக்கம் சாய்ந்தது.

ஒன்றரை மாத காலமாக கோலகலமாக நடந்து வந்த ஐபிஎல் 12ஆவது பருவகாலத்தின் இறுதி ஆட்டம் நேற்று இடம்பெற்றது. பெரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஹைதராபாத் ராஜீவ் காந்தி அரங்கில் நடைபெறும் இறுதி ஆட்டத்தில் டோனி தலைமையிலான சென்னை சூப்பர்கிங்ஸ் அணியும் ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின. பூவா தலையா சுழற்றிப் பார்த்ததில் வென்ற மும்பை அணி அணித் தலைவர் ரோஹித் சர்மா யாருமே எதிர்பார்க்காத வகையில் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். மும்பை அணியில் ஒரு மாற்றமாக ஜெயந்த் யாதவுக்கு பதிலாக மிட்ச் மெக்லேனேகன் இடம் பிடித்துள்ளார். சென்னை அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

மும்பை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டீகொக், ரோஹித் சர்மா களமிறங்கியபோது ரசிகர்கள் கரகோசம் எழுப்பி வரவேற்றனர். நடப்பு சம்பியன் சிஎஸ்கே அணியினர் டோனி தலைமையில் களமிறங்கியபோது, ரசிகர்கள் உற்சாகத்தில் திளைத்தனர் கோசமிட்டனர். ஏறக்குறைய 32 ஆயிரத்து 405 ரசிகர்கள் மைதானத்தில் போட்டியை கண்டு ரசித்தனர்.

சாஹர் முதலாவது பந்துப் பரிமாற்றத்தைக் கட்டுக்கோப்பாக வீசினார். தாக்கூர் வீசிய 2ஆவது பந்துப் பரிமாற்றத்தில் சர்மா ஆறு ஓட்டம் அடித்து ரசிகர்களை குசிப்படுத்தினார். சாஹர் வீசிய 3ஆவது பந்துப் பரிமாற்றத்தில் டீ கொக் 3 ஆறு ஓட்டங்களை விளாசி ரன்ரேட்டை எகிறச் செய்தார். அதிரடி ஆட்டத்தால் மிரண்டது சென்னை.

டோனி பந்து வீச்சில் மாற்றம் செய்தார். ஹர்பஜனை அழைத்தார். ஹர்பஜன் பந்துப் பரிமாற்றத்தில் ரோஹித் சர்மா நான்கு ஓட்டம் அடித்தார். 5ஆவது பந்துப் பரிமாற்றத்தை தாக்கூர் வீசினார். 4ஆவது பந்தில் லெக் திசையில் டீகொக் ஆறு ஓட்டம் விளாசினார். ஆனால் அடுத்தபந்து ஷோர்ட் பிட்சாக வந்தது. இதை சரியாக கணிக்கத் தவறி டீகொக் அடித்ததால் அது டோனியிடம் தஞ்சம் புகுந்தது. டீகொக் 29 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். டீ கொக்கை ஆட்டமிழக்கச் செய்தபோது, தாக்கூர் அவரை வெளியே போகுமாறு செய்கை செய்தார். இது ஐபிஎல் விதிமுறையின்படி தவறாகும்.

**அடுத்து சூர்யகுமார் யாதவ் வந்து, சர்மாவுடன் சேர்ந்தார். சாஹர் வீசிய 6ஆவது பந்துப் பரிமாற்றத்தின் 2ஆவது பந்**தில் டோனியிடம் பிடி கொடுத்து 15 ஓட்டங்களில் ரோஹித் சர்மா நடையைக் கட்டினார். இந்தப் பந்து பரிமாற்றத்தை ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றமாக சாஹர் வீசினார்.

ரோஹித் சர்மாவை ஆட்டமிழக்கச் செய்தபோது, டோனி ஐபிஎல் போட்டியில் புதிய சாதனையை எட்டினார். ஐபிஎல் போட்டியில் இதுவரை 132 பிடிகளை எடுத்து டோனி சாதனை படைத்துள்ளார். இதற்கு முன்னர் தினேஷ்; கார்த்திக் 131 பிடிகளை எடுத்திருந்த நிலையில், அதை டோனி முறியடித்துள்ளார். 'பவர்ப்ளே' முடிவில் 2 இலக்குகள் இழப்புக்கு 42 ஓட்டங்கள்கள் சேர்த்திருந்தது மும்பை இந்தியன்ஸ் அணி.

இசான் கிசன், சூர்யகுமார் யாதவ் நிதானமாக துடுப்பெடுத்தாடினர். பிராவோ வீசிய 10ஆவது பந்துப் பரிமாற்றத்தில் இசான் கிசான் 2 நான்கு ஓட்டங்களை விளாசினார். ஹர்பஜன் வீசிய 11ஆவது பந்துப் பரிமாற்றத்தில் யாதவ், கிசான் தலா ஒரு நான்கு ஓட்டங்களை அடித்தனர். 12ஆவது பந்துப் பரிமாற்றத்தை இம்ரான் தாஹீர் வீசினார். அவரின் 2ஆவது பந்தில் சூர்யகுமார் யாதவ் 15 ஓட்டங்கள் சேர்த்திருந்த நிலையில், பந்து நேரடியாகத் தாக்கியதில் ஆட்டமிழந்தார். அடுத்து குர்னால் பாண்டியா வந்தார். மீண்டும் தாக்கூர் பந்துவீச அழைக்கப்பட்டார். 13ஆவது பந்து பரிமாற்றத்தை தாக்கூர் வீசினார். 7 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், குர்னால் பாண்டியா அடித்த பந்தை தாக்கூர் பிடித்து ஆட்டமிழக்கச் செய்தார்.

அடுத்து வந்த பொலார்ட், கிசானுடன் சேர்ந்தார். தாஹீர் வீசிய 15ஆவது பந்துப் பரிமாற்றத்தின் முதல் பந்தில் பொலார்ட் ஆறு ஓட்டம் அடித்தார். அந்தப் பந்து பரிமாற்றத்தின் 5ஆவது பந்தில் இசான் கிசான் ரெய்னாவிடம் பிடி கொடுத்து 23 ஓட்டங்களில் வெளியேறினார்.

82 ஓட்டங்களுக்கு 3வது விக்கெட்டை இழந்த மும்பை அணி, அடுத்து 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்தது. தாக்கூர் வீசிய 18ஆவது பந்துப் பரிமாற்றத்தில் ஹர்திக், பொலார்ட் தலா ஒரு ஆறு ஓட்டம் விளாசினர். 19ஆவது பந்துப் பரிமாற்றத்தை தீபக் சாஹர் வீசினார். 16 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், ஹர்திக் பாண்டியா எல்பிடபிள்யு முறையில் வெளியேறினார்.

அடுத்து வந்த ராகுல் சாஹர் ஓட்டம் எதுவும் எடுக்காமல் டூப்பிளசிஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து மெக்லனஹன் களமிறங்கினார். கடைசி பந்துப் பரிமாற்றத்தை பிராவோ வீசினார். முதல் மூன்று பந்துகள் டொட் பந்துகளாகவும் பிராவோ வீசினார். 4ஆவது பந்தில் மெக்லனஹன் டக்அவுட்டில் ரன் அவுட்டாகினார். கடைசி இரு பந்துகளில் பொலார்ட் இரு நான்கு ஓட்டங்கள் அடிக்க ஆட்டம் முடிவுக்கு வந்தது.

கடைசி இரு பந்துப் பரிமாற்றங்களில் 3 நான்கு ஓட்டங்கள், 3 இலக்குகள் வீழ்ந்தன. 20 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் **மும்பை இந்தியன்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்ங்களில் 8** இலக்குகள் இழப்புக்கு 149 ஓட்டங்கள் சேர்த்தது. பொலார்ட் 46 ஓட்டங்களில் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். சிஎஸ்கே தரப்பில் சாஹர் 3 இலக்குகளையும், தாக்கூர், இம்ரான் தாஹிர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

150 ஓட்டங்களை விரட்ட டூபிளெசிஸ், வொட்சன் ஜோடி களமிறங்கியது. இறுதி ஆட்டத்துக்காக கொண்டு வரப்பட்ட மெக்லேனேகன் முதல் பந்துப் பரிமாற்றத்தை வீசினார். மூன்றாவது பந்தில் நான்கு ஓட்டத்தை அடித்தார் பிளெசிஸ். குர்னால் பாண்டியாவின் அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் ஒரு நான்கு ஓட்டம் அடிக்கப்பட்டது. மந்தமாக ஆரம்பித்தாலும் நான்காவது பந்துப் பரிமாற்றத்தை குர்னால் பாண்டியா வீச வெழுத்து வாங்கினார் பிளெசிஸ். இரண்டு நான்கு ஓட்டங்கள், ஓர் ஆறு ஆட்டம் என்று விளாசியவர் இறுதிப் பந்தில் டீகொக்கிடம் பிடிகொடுத்து 26 ஓட்டங்களுடன் வெளியேறினார். 33 ஓட்டங்களில் சென்னையின் முதலாவது இலக்கு வீழ்த்தப்பட்டது. தொடர்ந்து ரெய்னா நுழைந்தார். மலிங்க ஆறாவது பந்துப் பரிமாற்றதை வீசினார். வொட்சன் 2 நான்கு ஓட்டங்கள், ஆறு ஓட்டம் அதிரடியாக அடிக்க பவர்பிளே முடிவில் 53 ஓட்டங்களைப் பெற்றது. ரெய்னா சொதப்பினார். 14 பந்துகளில் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் சென்னை அணி ஆட்டம் காணத் தொடங்கியது.

தொடர் முழுவதும் சிறப்பாக ஆடிய ராயுடு வந்த வேகத்தில் வெளியேறினார். டோனி நுழைந்தார். அவரும் துரதிஷ;டவசமாக ரன்அவுட்டாக சென்னையின் ஆரவாரம் அடங்கியது. 82 ஓட்டங்களுக்கு 4 இலக்குகள்ள இழந்து தடுமாறியது. இதன் பின்னர் பிராவோ, வொட்சன் இணை ஆட்டத்தை நகர்த்தியது. இலக்கு இழப்புகளிலிருந்து மெதுவாக அணியை மீட்டது. 16ஆவது பந்துப் பரிமாற்றத்தை மலிங்க வீசி, தாண்டவம் ஆடினார் வொட்சன். 20 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்று வெற்றி வாய்ப்பை தக்கவைத்தது. குர்னால் பாண்டியா வீசிய 18 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் வொட்சன் அடுத்தடுத்து 3 ஆறு ஓட்டங்கள் விளாசி வெற்றியை நோக்கி நகர்த்தினார். அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் பிராவோ ஆட்டமிழக்க ஆட்டம் மீண்டும் தடுமாறியது. இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் 9 ஓட்டங்கள் சென்னையின் வெற்றிக் தேவை என்ற நிலையில், மலிங்கவை பந்து வீச அழைத்தார் ரோகித். மலிங்கவுக்கு கொடுத்த பொறுப்பை அவர் சிறப்பாக நிறைவேற்றினார். வொட்சனை 59 பந்துகளில் 80 ஓட்டங்களுடன் ரன் அவுட்டில் வெளியேற்றி ஆட்டத்தை தமது பக்கம் கொண்டு வந்தது மும்பை. இறுதிப் பந்தில் இரண்டு ஆட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இறுதிப் பந்தில் மலிங்க இறுதி இலக்கை சரிக்க, மும்பை ஓர் ஓட்டத்தால் வெற்றி பெற்றது.

இந்த ஐபிஎல் தொடரில் நான்கு தடவைகள் மும்பையை **சந்தித்த சென்னை, நான்கு ஆட்டங்களிலும் தோல்வியையே சந்தித்துள்ளது.** (ஓ.5)

**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள அச்சகம் ஒன்றுக்கு
பின்வருவனவற்றுக்கு வேலையாள்கள் தேவை
01.Graphic Designer
02.ஒப்பு நோக்குநர்
ஆர்வம் உள்ளவர்கள் நாளை (14.05.2019)
செவ்வாய்க்கிழமை 10.00 - 01.00 வரை
நேரில் வரவும்.

**357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**

கோடிபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 441 சீட்டிழுப்பு திகதி: 2019.05.10
வர்ணம்: செம்மஞ்சள் வெள்ளிக்கிழமை
K 08 15 28 44
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
2019.05.12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு பச்சை நிற டிக்கட்டுகள் செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 12.05.2019 | வெற்றி வாரம் 2516 | வர்ணம் ஊதா
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 14 50 58 59
செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி ரூ. 3.238.530
14.05.2019 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 608
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.05.12
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,847,435/-
வெற்றி இலக்கங்கள் 31 46 53 68
ஆங்கில எழுத்து T
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 970
சீட்டிழுப்பு திகதி 2019.05.11 சனிக்கிழமை
K 16 43 53 72
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**
நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?
O/L, A/L எழுதியோர் இளைஞர், யுவதிகள்,பல்கலை மாணவர்கள் தொழில்புரிவோர், ஆசிரியர்கள்,வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்: 18.05.2019 சனி
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டுமே! முன்பதிவுகள் 16.05.2019 வரைமட்டும்!
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, (பெருமாள் கோயில் அருகில்) யாழ்நகர்.
021 222 4282
077 621 4567

நூல்கள் வெளியீடு
கே. டானியல்
படைப்புக்கள் (தொகுதி இரண்டு)
அறிமுக உரை
D.Sam
நிதிக் கணக்கீட்டுக் கோட்பாடுகள் (பதிப்பு ஆறு)
அறிமுக உரை
தலைமை
பேராசிரியர் அ.சண்முகதாஸ்

# பட்லர் அதிரடியாட்டம்

# பாகிஸ்தான் அணியை வென்றது இங்கிலாந்து

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பட்லரின் அதிரடிச் சதம் கைகொடுக்க இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 3 இலக்குகளை இழந்து 373 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக பட்லர் 55 பந்துகளில் 9 சிக்சர்கள் அடங்கலாக 110 ஓட்டங்களைக் குவித்தார். றோய் 87 ஓட்டங்களையும், மோர்கன் 71 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சாய் அப்ரிடி, ஹசன் அலி, யாசிர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி இங்கிலாந்துக்கு சிறந்த முறையில் பதிலளித்து விளையா டியது. எனினும் அந்த அணியால் 7 இலக்குகள் இழப்புக்கு 361 ஓட்டங்களை மட்டுமே எடுக்க இயன்றது. இதனால் 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இங்கிலாந்து அணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பகர் சமன் 138 ஓட்டங்களைப் பெற்றார்.

அசிப் அலி 51 ஓட்டங்களையும், அசாம் 51 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வில்லி, பிளங்கட் இருவரும் தலா 2 இலக்குகளையும், வோக்ஸ், மொயின் அலி, ரசிட் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)




## மட்ரிட் ரென்னிஸ் தொடர்

## சிமோனா ஹாலெப் அரையிறுதிக்கு



மட்ரிட் பகிரங்க ரென்னிஸ் தொடர் ஸ்பெயின் நாட்டில் நடைபெற்று வருகின்றது. தற்போது பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

முதல் ஆட்டத்தில் 3ஆம் நிலை வீராங்கனையான சிமோனா ஹாலெப் 3ஆம் நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்தியை எதிர்கொண்டார். இதில் ஹாலெப் 7:5, 7:5 என்ற நேர்செற் கணக்கில் இலகு வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். இவர் அரையிறுதியில் சுவிற்சர்லாந்து வீரர் பிலிண்டா பென்ஸிக்கை எதிர்கொள்ளவுள்ளார்.

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

...திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.05.2019 இல் ...டு வெளியிடப்பெற்றது.